KALANILAYAM

தனிப்பிரதி விலை அணா 0-2-6.

# கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

உள் நாடு—வருஷ சந்தா ரூ. 7 0 0
6 மாதம் ரூ. 3 12 0
புற நாடு—வருஷ சந்தா ரூ. 9 0 0

காரியாலயம்:—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

19 JAN 1934
MADRAS

Vol 6.] 1933 ஞூ ஜூலை மீ 27உ [No. 29

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 549
2. கம்பராமாயணம் (சடாயு வுயிர்நீத்த படலம்)
T. N. சேஷாசலம் B.A.B.L. 551
3. காற்றுமழை (அங்கம் 2. களம் 2.)
Shakespeare's Tempest 554
4. நம்மாழ்வார் வைபவம் (5-ம் பத்து, 5-ம் தசகம்)
K. இராஜகோபாலாச்சாரியார் B.A.B.L. 557
5. தமிழ்ப் பாடம்
அஷ்ட பிரபந்தம்—திருவேங்கடமாலை 539
6. அமீல் (Hanri Frederic Amiel)
T. R. இராஜகோபால் 560
7. கலித்தொகை (பாலைக்கலி, 18)
T. A. கனகசபாபதி முதலியார் 562
8. பொதிகை நிகண்டு (பி-பீ-பு.)
S. வையாபுரிப் பிள்ளை B.A.B.L. 563
9. வர்த்தமானம் 548

## கலாநிலயம்

189153

### வீண் வீண் எல்லாம் வீண்.

'பெரியோ ரெல்லாம் பெரியரு மல்லர்' என்னுமம் முதுமொழியின் பொருள் யாவதாயினும் ஆகுக. மற்று, வென்றோ ரெல்லாம் வென்றவரு மல்லர், என்னுங் கருத்தை உன்னியுணர்ந்தால் மானுட முயற்சிகளில் மையல்கொண்டு உழலும் மனமானது ஒருசிறிது தெளிவுபெறலாம். தோற்றவர்களே வென்றவர்களாகவல்ல திறத்தினை ஊடலிற் காட்டினார் நாயனார். இதனுண்மையைத் தம் அனுபவத்தோடு ஒப்பு நோக்கித் துணிந்துகொள்ளக்கூடிய செவ்வி யாருக்கு வாய்க்குமோ இக்காலம் யாமறியோம். எனினும் ஊடலில் மட்டுமேயல்லாமல் வாழ்க்கையின் இன்னும் பல துறைகளிலும் தோற்றார்போல் தோன்றுகின்றவர்களே வெற்றியுடைய வீரர்களாய் முடிகின்றதை முயன்று முயன்று உணர்தல் நலம். இதனை உணர்ந்தால் வெற்றியைப் போன்றதோர் தோல்வி வேறெதுவும் இல்லை எனத் தகுந்த நிலைமைகள் பலவற்றின் அருமையை அறிந்துகொள்வதும் அரியதாகாது.

வெற்றியை விரும்புவதிலும் மனிதர் தோல்வியை அஞ்சுவதே அதிகம். இக்கால வாழ்க்கைமுறையே, உணராமலேனும், ஓயாமல் நடத்துகின்ற ஒருபெரும் போராட்டமாக அமைக்கப்பெற்றுவருகின்ற தன்மையை அறிவுடையோர் அனைவரும் நன்கு அறிவார். இந்தப் போரில் பிந்தி வீழாமல் தப்புவதையே 'முன்னுக்கு வருதல்' எனப் பகர்தல் வழக்கமாகி இருக்கின்றது. எசமானனுக்கும் வேலைக்காரனுக்கும், மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரர் உறவுற எடுத்துக் காட்டிய வண்ணம், "உண்பன நாழி உடுப்பன இரண்டே, பிறவும் எல்லாம் ஓரொக்குமே" யாதலின், இவ் வெசமானன், அவ் வேலைக்காரனினும் அதிகமாகப் பெற்றிருக்கும் செல்வம் செல்வாக்கு அனையவை அனைத்தும் அவ்வேலைக்காரனினுந் தான் முந்தியிருக்கின்றான் என்பதைச் சொல்லாமல் சொல்லித் தருகின்ற குறிகளே யாகி முடிகின்றன. ஒரு ஆன்மாவிற்கும் அதன் நாயகனாகிய கடவுளிற்கும் இடையே ஏற்பட்டுள்ள ஒப்பந்தத்தைநடத்திவைப்பதற்கு நாழி அரிசியும் நான்கு முழத் துணியுந் தவிர, புறத்துள பிறவெல்லாம் மிகை. எனின், முன்னுக்கு வருதல் என்னும் முழக்கத்தினுள் அடங்கிய கருத்து, மிகையாய பலவற்றை மேன்மேல் பாடுபட்டுச் சேர்த்துக் கொள்ளவேண்டுமென்னுஞ் சிந்தனையால் உழல்வதே என்று உணர்வதல்லால் வேறு இனி வழியில்லை. ஏதன்ஸ் நகரில் நிறுவிய வொரு பெரும் பொருட்காட்சிச்சாலையுட் சென்று அங்குளவற்றைக் கண்டு திரும்புங்கால் "எனக்கு வேண்டாதன எத்தனை எத்தனை இவ்வுலகில் உள" என்று தன்னருகிருந்தோர்க்கு விளம்பிய ஸாக்ரிடீஸின் மொழிகளை இச்செவ்வியில் சற்றே நினைத்துக்கொளல் வேண்டும். முன்னேற்றமென்னுஞ் சொல்லிற்கு இச்சிந்தனை நல்லதோர் கட்டளைக்கல் லாகும்.

எனின். வென்றுவென்று முன்னேறுவதெல்லாம், வாழ்க்கைப்போரில் மற்றவர்களைப் புறங்காணாமல் தானே பிந்தினான் இவன் என்று பிறர் தன்னை எள்ளாவண்ணம் காத்துக்கொள்ளவேண்டும் என்னும் அச்சத்தால் விளைவதேயன்றி, உண்மையில் முன்னேறிப் பெறவேண்டிய பொருள் நிலைகளின் இன்றியமையாமையா லன்று. பற்பல தொழில்களிலும் உத்தியோகங்களிலும் ஈடுபட்டிருப்பவர் அனை

வரும், நாலுபேருக்குமுன் தான் ஓர் ஆளாகத்
தோன்றவேண்டும் — இல்லையேல் தன்னை ஒன்றற்
கும் உதவாதவன் என்று உலகத்தோர் உரைத்து
விடுவார்களே என்ற துணுக்கத்தால் நாணமற்ற நெ
றியில் நியாயமற்ற முறைகளை மாந்தரிற் பெரும்
பான்மையோர் கையாளத் தலைப்படுகின்றனர். மற்ற
வர் தம்மை மதிப்பதுகிடக்க, தம்மிடத்தில் தமக்கே
தக்க மதிப்புடையவர் வேறொன்றும் வென்றுபெற
விழைய வேண்டா. தன்னுடைய மதிப்பிற்கு ஆதார
மாயிருப்பன, "நன்மனம் நிலைக்கப்பெற்றேன்," திரு
வருள் வாய்க்கப்பெற்றேன்," என்பன அனைய சீரிய
நினைவுகளே யல்லால் வேறில்லை;மற்றவைகளெல்லாம்
கண்ணாடியுள் தன் நிழலை நிமிர்த்தி நிறுத்தவும், ஏனை
யோர்முன் பெருமிதம் பேசவும், அயலார் நெஞ்சில்
பொறாமைத்தீயை மூட்டவுந்தான் பயன்படுதவும்.
தன் மதிப்பை இழந்தவனே பிறர் மதிப்பிற்காகப்
பேய்க்கோலங் கொள்ளவுந் துணிவான். தனக்குத்
தானே தோற்றுநிற்கின்ற பரிபவத்தை மறைக்க முயல்
கின்ற சூழ்ச்சியே, மற்றவரை வென்று முன்னேற
வேண்டும் என்னும் முயற்சிமுழக்கங்களுக்குக் காரண
மாகின்றது. எனின் இவ் வெளிவெற்றியானது உள்
ளத்தேநிகழ்ந்த ஒரு தோல்வியின் புறத்துறு குறியா
கியதோற்றமே யன்றி வேறன்று. வென்றோ ரெல்லாம்
வென்றவரு மல்லர்; இவ் வெற்றியினளவால் பெரி
யோரெல்லாம் பெரியரு மல்லர். இன்னவாறு வெற்றி
கொண்ட கோழைகளுக் கெதிரே, தோல்வியேபோல்
வெற்றிகொள்ளும் வீரர்களின் மேன்மையை உணர்
தல் நலம். ஊடலில் தோற்பவர் வெளிப்படுத்தும்
இரகசியம் சிறியதன்று.

உலக விவகார ஊடாட்டங்களில் இவன் வென்றி
லன் பிந்தினன் என்று கைகாட்டி இகழப்படுவதற்
குரியவராய்நிற்பவர் அனைவரும்இனி, தமக்குத்தாமே
தோற்காத வீரரென்று மகிழ்ந்துவிடலாகாது. பால்
எனப்படுவதெல்லாம் வெள்ளையாயிருக்கும் என்ற
வளவில், வெள்ளையா யிருப்பதெல்லாம் பாலேஎன்று
மதிக்கப்புகுந்தால் அது வோர் தர்க்கப் பிழையாம்.
வெளுத்ததெல்லாம் பாலன்று. ஆதலின், பொதுஜன
மதிப்பின்படி தம்முடைய முயற்சியால் முன்னேறிய
வரனைவரும் தமக்குரிய பெருமையைத் தம்முள்ளே
கண்டமையமாட்டாமல் தோல்வியுற்றவர்கள் தாம்,
என்ற வரையில் இவ்வாசகத்தை ஏற்றுக் கொள்ள
வேண்டுமேயன்றி, உலகநிலையில் பிந்தியவரனைவரும்
தம்பால் மனம் நிறைந்த மதிப்புடைய உத்தமர்கள்
என்று நாம்உரைக்கின்றோமென வெண்ணவேண்டா.
இவர்களிற் பலர், உள்ளே தம் மனத்திற்குத் தோற்
றதுமன்றிப் புறத்தே வெல்லற்குவேண்டிய நெஞ்சத்
திட்பம், இடுக்கண் அழியாமை, ஊக்கம், உழைப்பு,
மதிநுட்பம், சூழ்ச்சித்திறம் முதலியவைகளும் இல்
லாத புல்லர்கள் ஆதலுங் கூடும். ஆசையின் அவல
மெல்லாம் இவர்பால் உளது, அழுக்காற்றிற்கும் அள
வில்லை, ஆயினும், கீழ்மையினும் கூலி வருந்தாமல்
வாங்க இயலாது என்பதை உன்னுமலோ, உன்னி
யும் உடல் வணங்காமலோ, மற்றவரைத் தம்மேல்
மிதித்துச் செல்லும்படி விட்டுவிட்ட இழுதைச் சரித்
திரமே பெரும்பாலும் உருப்படாதவர் தெரியக்காட்
டுகின்றனர். ஆதலால், இழுதையர்களை விழுமியோர்
என்றெண்ணுமல் அப்பிழையினின்று காத்துக்கொ
[illegible] வேண்டும்.

இன்னவர் கிடக்க, தோற்றார்போல் தோன்று
மவர்களில் மற்றொரு இனத்தை மனத்துட் கொள்
வோம். "அவர்தாம் சாதுக்கள்" என்ற சொல்லால்
குறிக்கப்படுபவர். இவர், புறத்திலே போர்கள் புரிந்து
முன்னேறவேண்டும் என்னும் கருத்தில்லாதவர். பலர்
காணப் பெறுகின்ற வெற்றியால் தம் பெருமையைப்
பரப்பவேண்டும் என்னும் நினைவு இவர்களுக்கு எழு
கின்றதில்லை. அவர் அறிந்தோ அறியாமலோ, அவர்
மனம் யாதும் நிரப்பாமல் எல்லாம் நிரம்பியிருக்
கின்ற தாதலின், குறைவுடைய மனத்தால் தூண்டப்
படுகின்ற தூண்டல்களுக்குத் தோற்காமல் உழைக்க
வேண்டாதவர்களாயமைகின்றனர். சான்றோர் சிறப்பு
அவர் இருத்தலே. புறத்துள பொருள்களில் இவர்க
ளைப் பிறர் வென்று வென்று பின்தள்ளி முன்னேற
முயல்கின்றபோது, அதனைத் தடுக்கவல்லவரா யிருந்
தும் அது செய்யாமல், தாம் பின்னிட அப்பிறர்தாம்
முன்னேற வழிவிடும் பெற்றியராய இவர்,வெளிப்பார்
வைக்கு முற்றிலுந் தோற்றவர் போன்றே தோன்ற
லாம். எனினும் தகைமை சான்ற இவர்களே இறுதி
யில் வென்றவர்களாகின்றார். "சாதுக்களே ஆசீர்வ
திக்கப்பெற்றவர், ஏனெனில், இவ்வுலகினது உரிமை
யைப் பெறுவார் இவர்" என்று இயேசுகிறிஸ்து
விளம்பியதன் வாய்மையைக் கண்ணபிரான் பசுக்
களுக்குப் பின்சென்று காட்டினர். ஊடலில் தோற்
றவர் தலைவியின் தலையளியைப் பெறுகின்றாரென்
றால், உலகில் தோற்றவர், கடவுளின் திருவருளைப்
பெறுகின்றனர். வெற்றிதான் இதன்மேல் ஒன்று
உளதோ. போர்க்களம் புகாமலும், பிறர்க்கோர் ஊறு
செய்யாமலும், அவாவி உழலாமலும், இழப்பதற்
கியலாமலும்,வாய்க்கின்றவோர் வெற்றிஇதனைவேண்
டாதார் வேறு சில வேண்டிவேண்டி என் செய்தார்.

மற்றொன்றும் இங்குப் பகரலாம். முன்னேற்றமெ
ன்ற மொழியின் மரபிற்கே உரிய வகையிலும் வெற்றி
வாய்ப்பதனினும் தோல்வியடைவதிற் சிற்சிலபோது
உண்மையானநன்மை இருக்கலாம்என நினைக்க இட
முளது. மற்றவெல்லாம் ஒருபடித்தாக, வெற்றியின்
தோற்றத்தால் விளையும் இறுமாப்பேனும் இல்லாத
வர்களாவார். அதுவுமன்றி இத்தோல்வியைத்தொடர்
ந்துவரும்வறுமை முதலிய இடுக்கண்களால் ஒருகால்
இவர்மனம் உண்மையின் நிலையை உணர நேரினும்
நேரலாம். முன்னேறி நிற்பவர்க்கு இந்தச் செவ்வி
வாய்த்தலருமை. ஆதலாற்றான் முன்னேறிய ஒட்ட
கங்கள் ஊசியின் காதைக்கடந்து நற்பதஞ் சேரமாட்
டாமல் தீர்கின்றன. இது வேறு விடயம்.

மனிதன் தனித்தனி முயலும் முன்னேற்றத்திற்
குரிய தன்மைகளாக உரைத்த இவை ஒரு நாட்டின்
பொதுமுன்னேற்றத்திற்கும் ஒக்கும். அங்கும் அப்
படித்தான். உள்ளார்ந்த வாழ்க்கையில் தோற்றவர்
அனைவரும் ஒன்றுகூடி வெளிப்பரந்து விணுனவை
களை வென்றுகொள்ள வேண்டுகின்ற தாழ்மையின்
தன்மை இது. இக்கால மதிப்பின்படி ஒரு நாட்டின்
உயர்வும் சிறப்பும் அது பறக்கவிடும் ஆகாயக்கப்பல்
களின் உயரமும் வேகமுங் கொண்டு அளக்கப்படு
கின்றன. இவைகளைக் கழுத்தொடிய அண்ணாந்து
பார்த்துப் பார்த்து மேனாட்டோர் அடைந்திருக்கும்
முன்னேற்றத்தை எடுத்துக்கூறி நாமும் அத்திறமை
எய்தவேண்டுமென்ற ஊக்கத்தை அடுத்து ஊட்டிவரு
கின்றவர் இன்ற இந்திய முன்னேற்றத்தின் [illegible]



[illegible]டைய தலைவர்கள்எத்தனையோ பலர்.வர்த்தமானப்
பத்திரிகைகளை மென்றுமென்று உமிழுஞ் சொற்கள்
இவையே யன்றி, பாவம், கற்பதற்குக் கல்வியென்
றொன் றிருக்கின்றது என்பதுகூட அறியாத இவர்க
ளிற் பலர்வேறு யாது பேச இயலும்.உட்கார்ந்திருப்
பவர்களைவிட நிற்பவர்கள் முன்னேற்ற மடைந்திருப்
பவர் எனக் கருதித் தங்கள் குடுமியைப் பிடித்துத் தங்
களையே தூக்கி நிறுத்திக்கொள்ள நினைக்கின்ற நீர்மை
யோர் இவர். இங்கு, ஆகாய விமானங்களை அண்ணா
ந்துபார்த்து நாம் நெட்டுயிர்ப்பு வீங்குங்கால் அங்கு
ஜான் கால்ஸ்வோர்த்தி (John Galsworthy) என்
னும் ஓர் ஆங்கிலப் புலவரே யாது கூறுகின்றார்—
(மொழிபெயர்ப்பு மாத்திரம் ஈண்டுத் தருகின்றோம்.)

"ஆகாயக் கப்பலின் ஆச்சரியம் அதிகமாயினும்,
பொருளைவிட்டு அதன் நிழலைத் தொடர்கின்றமாறுட
மதியின் பேதைமை பின்னும் ஆச்சரியமாயிருக்கின்
றது... தூரம் என்பதை எல்லாந் தொலைத்து வர்த்த
கத்தை நாம் எத்தனைதான் வளர்த்தாலும், அதனால்
நாம், உடல் நலத்தையேனும் உண்மை இன்பத்தை
யேனும், மனித தர்மங்களையேனும் எவ்வாறு பெருக்
கினவர்கள் ஆவோம்...மோட்டார்கார்களும் மற்ற
எந்திர சாதனங்களும் ஆன்ம அமைதிக்கு உதவுவ
தெங்ஙனம். உணவு உடை உறக்கம், நல்லோர் உறவு,
கலைநலத்தால் கனிந்ததோர் உணர்வு, ஆகிய இவைகள்
தவிர பிறவெல்லாம், 'வீண் வீண் எல்லாம் வீண்.'
நன்மைக்கோ இடம் பெரிதில்லாததும், அளவற்ற
தீமைகளுக்கே ஆளாக்க வல்லதும், ஆகிய இவ் வா
காயக்கப்பல்களை, வர்த்தகத்திற்கேனும் வழிகடப்ப
தற்கேனும் போரிற்கேனும் ஒருவரும் உபயோகிக்க
லாகாது என்று எல்லா நாட்டினரும் ஒன்றுகூடி
முடிவுசெய்வார்களாயின், என் மனம் மிக மகிழும்.
இருக்கின்ற ஆகாயப் கப்பல்களை ஒன்றொன்றாய்த்
தேடித்தேடி உடைத்தெறிதல் வேண்டும். அந்தக்கா
லம் என்றைக்குக் கைகூடுமோ என்று ஏங்கும் என்
னெஞ்சம்"

முன்னேற்றம் பெரிதுடைய மயக்கத்தை இத்த
கைய வித்தகமொழிகள் ஓரளவு தெளிவிக்கலாம்.
பூனைக்குட்டி தன் வாலை முகத்தினிடம் கொணர்ந்து
வைத்துக்கொள்ளவேண்டும் என முயல்வதுபோல்
சுழன்று சுழன்று வருகின்ற சூழ்ச்சியை ஒக்குமாம்
இம் முன்னேற்றமனைத்தும்.

உணவும் உடையும் நிலமென்னும் நல்லாள் தரும்.
உறக்கமென்பது அறங்கடவா வாழ்க்கையர்க்கு இய
ற்கை அன்னை நாடோறும் நல்குகின்ற பரிசில். நல்
லோர் உறவும் கலைநலங்கனிந்த உணர்வும் கைவரு
தற் குதவுவது கலாநிலயம்.

# கம்பராமாயணம்

## ஆரணிய காண்டம்—8. சடாயு வுயிர்நீத்த படலம்.

[536-வது பக்கத் தொடர்ச்சி]

முன்மொழி மாறத் தேன்மொழி தேர்ந்தனள்.

முனிவரனுருவோடு இராவணன் வந்த சூழ்ச்சிதான்
யாவதே யாயினும், சீதையைக் கண்ணுற்றவுடன்
மூண்டெழு மோகத்தினனாய் அவளது வடிவழகைப்
பலபடப்பகர்ந்து தன்உள்ளம்முழுவதும் அவள்பால்
துறந்துகாட்டும் புன்மையால் தன்னைத்துறவியென்றே
அவள்கருதவேண்டுமென்றுசாதிப்பான்போல்பேசிய
துகேட்டும்துணுக்கமெய்தாமல், அவனுக்குஉபசரணை
கள் செய்து, "இவரோ நமது அதிதி, மேலும் பிரா
மணர், கேட்டதைச் சொல்லாவிடில் நம்மைச் சபிப்
பார்" என்று தன் சரித்திரத்தை நிகழ்த்தத் தொடங்
கிய அச்சீதை சுருங்கச்சொல்லும் நயத்தினைச் சிறிதே
னும் அறியாதவளாகவே வான்மீக முனிவரால் அமை
க்கப்பெற்றிருக்கின்றாள். விரிவுரை நிகழ்த்தியதோடு
நின்றாளேற் சாலுமே; தான் பன்னிரண்டு வருட
காலம் அயோத்தி மாளிகையில் பலவித போகங்களை
அனுபவித்து இச்சைகளெல்லாம் நிறைவேறப்பெற்ற
பான்மையை உவகையோடு இவள் உரைக்குங்கால்,
இராவணன்றன் இருபது செவிகளில் அது கரைந்
தழிந்து உறுத்தாமல் ஒழிந்தால் ஒழியலாமேயன்றி,
ஏனையோர் கேட்கநேரின் அதன் உறைப்பிற் காற்று
மல் அவர் இருசெவிகளும் கடுக்கும். தன்னுடைய வய
தெல்லாம் தெரியச்சொல்லியாகின்றது. கைகேசியின்
கொடுமையை வைதேகி அக் கபட சந்நியாசிக்குக் கூற
லுற்றிலள். கைகேயினால் தாம் நாடு அபகரிக்கப்பட்
டவர்களான வகையை விளம்பி அவன்பால் பரிவுமிக
வேண்டுவாள்போல் நயந்து நிற்கின்றாள். இத்தனையுஞ்
சொன்னவள், சற்றுமுன் இராமனை ஓர் மாய மானின்
பின் போக்கியதும், போனவன்பின் இலக்குவனைப்
[illegible]
யிருப்பாளாயின், வேறொன்றும் இவள்பால் நயத்தற்
கிலதேனும் வாய்மைநெறியாயினும் கற்றவள் என்ற
பரிசுபெற்றவளாகலாம். இந்தச் செய்தியையெல்லாம்
பகராமல் அடியோடு அமிழ்த்திவிட்டதுமன்றி,தனது
கணவர் வழக்கப்படி வேட்டைக்குப் போயிருப்பவர்
போல் பாவித்து, கந்தமூல பலங்களையும் மான் பன்றி
முதலிய இறைச்சியையும் கொண்டுடனே திரும்
பிவிடுவார் என்று செப்புவது, தன் வாய்மைத் திறத்
திற்குச்சற்றேனும்ஒவ்வாதென்பதைச் சீதைமறத்தல்
நேரிதன்று. இந்தப் பிதற்றல் பொய்களைக் கேட்டபின்
னும் இராவணன் இவளை வெறுத்தகலாமல் கொண்டு
செல்ல அவாவினன் என்றால், அது அவன்மதியின்
சிறுமையோ, மோகத்தின் வேகமோ, அவன் செய்த
பாவத்தின் வலிமையோ, அமரர் பெற்றுள வரங்க
ளின்ஆற்றலேயோ அறிகிலேம்.இராவணனுக்குத் தன்
வரலாற்றை விளம்பத் துவக்குமுன் சீதை,"வேட்டை
க்குப் போயிருந்த இராமர் லக்ஷ்மணருடன் திரும்பி
வருவதை ஒவ்வொரு நிமிஷமும் எதிர்பார்த்துத்
தனது கண்களுக்கு எட்டியமட்டும் காட்டை நான்கு
பக்கங்களிலும் நோக்கினள்" என்று வடநூல்
கூறும். தன் நெட்டுரை முடியுமுன் அவர் திரும்பி
விட்டால் என் செய்வதென்று அஞ்சினள் போலும்.
ஆயினும், கணவனுக்கு இடுக்கண் நேர்ந்ததெனக்
கலங்கியுளபேதுறவால் இவ்வுரிமை வாய்க்கட்டின்
றியே, ஒன்றல பல வீணுரைகள் நிகழ்த்தி நிற்கின்ற
ளென்று அவ்வரக்கன் மதித்து, பயனும் [illegible]
இல்லா இச்சொற்களைப் பொறுத்து, [illegible] பின்
னும் நயந்து வேண்டினன் என்பதல்லால் [illegible]
தி வேறிங்குக் காண்டலரிது. எனினும் இதற்கும் ஓர்
இடையூறாண்டு. இத்தனைத் தெளிவிட்ட [illegible]
[illegible]

பேசியிரான், பின்னும் தன் புனைவேடத்திறமெல்லாம் அறவே மறந்து "சீதாய், நான் இராவணன், அரக்கர் மன்னவன்" என இவனும் தன் பங்கிற்கு அம் மூட மொழிகளைத் துவக்கியிருக்கமாட்டானே.

கம்பர் கண்ட களம் இது; இனி இதனையே உருக்கித் தன் புலமையென்னும் அச்சிற் பாய்ச்சி உருச் செய்து காட்டுகின்ற காட்சியைக் காணலாம்—

இருந்தவன் யாவதிவ் விருக்கை யிங்குறை
இருந்தவன் யாவனீர் யாரை யென்றலும்
விருந்தின ரிவ்வழி விரகி லாரெனப்
பெருந்தடங் கண்ணவள் பேசன் மேயினாள்

[ஆதனத்தில் அமர்ந்தவன் ஆகிய இராவணன், "இந்த இருப்பிடம் யாது, இங்கு வசிக்கின்ற பெரிய தவமுடைய முனிவன் யாவன். நீர் யார்?" என்று வினவுதலும், பெரிய விசாலமான கண்களையுடைய சீதை, இவ்விடத்திற்குப் புதிதுவந்தவர், கபடம் இல்லாதவர், என்று மதித்து விடைகூறத் தொடங்கினாள்]

'பேசல் மேயினாள்' என்பதால் இங்கும் அவள் கெடிதுரைக்க நினைத்தவள்போல் தோன்றுகின்றதேனும், கேட்ட அளவிற்குமேல் உரைப்பதனினுங் குறைய வுரைப்பதே நலமெனக்கொண்ட இந்நங்கை,

தயாதன் றொல்குலத் தலைவன் றம்பியோ
டுயர்குலத் தன்னைசொ லாச்சி யேந்தினான்
அயர்வில திவ்வழி யுறையு மன்னவன்
பெயரினைத் தெரிகுதிர் பெருமை யீரென்றாள்

[பெருமையுடையவரே, தயரதனுடைய பழைய குலத்துக்குத் தலைவனானவன், உயர்ந்த குலத்தில் பிறந்த தன் தாயின் சொற்களைச் சிரமேற்கொண்டு தன் தம்பியுடன் தளர்ச்சி இன்றி இவ்விடத்தில் வசிக்கின்றான். அவனுடைய பெயரை நீர் அறிந்திருப்பீர்—என்றாள்]

இங்குறை இருந்தவன் யாவன் என்ற கேள்விக்குப் போதிய விடையாயிற்று; எனினும் 'நீர் யாரை' என்றதற் கிவள் வெளிப்பட விடை பகர்ந்திலள். கற்புடைய மங்கைமார் தம் கொழுநர் பெயரினைப் பேசலாகா மரபினால், 'அன்னவன் பெயரினைத் தெரிகுதிர்' என்றுரைத்த குறிப்பைக்கொண்டு தன்னை அத்தயரதன் தொல்குலத் தலைவனது தருமபத்தினி என்பதை இப்பெருமையான் உணர்ந்துகொள்வான் என உன்னினாள். 'உயர்குலத்தன்னை' என்று கைகேசியைப் பாராட்டுமிது, முன் தான் வடமொழியில் 'வளவள'வெனக்கழறிய இழுக்குடைய சொற்களை மாற்றிக்கொள்ளவேண்டுமென்னும் முனைவினால் நிகழ்வதுபோல் தோன்றுகின்றது. கோசல சக்கிரவர்த்தியின் புதல்வன் நாடுதுறந்து வனமே மேவநேர்ந்த வரலாறு அறியாதார் உளராகார் என்று எண்ணிய இவள் இதன் மேல் உரைப்பதெல்லாம் மிகை என நிறுத்திவிட்டனளாயினும் பின்னுமவள் மென்மொழிகளுக் கவாவிய செவிகள் நெறிக்க அம் மயலுடை யரக்கன்,

கேட்டனென் கண்டிலென் கெழுவு கங்கைநீர்
நாட்டிடை யொருமுறை நண்ணி னேன்மலர்
வாட்டடங் கண்ணினீர் யாவன் மாமகள்
காட்டிடை யரும்பகல் கழிக்கின் றீரென்றான்

[அச்செய்தியைக் கேட்டிருக்கின்றேன், எனினும் நான் அவர்களைக் கண்டதில்லை. நிறைந்த கங்கையாற்றின் நீர் பாயும் நாட்டிற்கு நான் ஓர் முறை போயிருக்கின்றேன். மற்று, காட்டினிடத்தில் கழித்தற்கரிய காலம் கழித்து வருகின்றவரும், குணமெல்லையும் மாண்புடையும் பேர்ன்ற பெரிய கண்களையுடையவரும் ஆகிய நீர் யாருக்குத் திருமகள்?—என்றான்]

'கேட்டெனென் கண்டிலென்' என்றிவன், உலகத்தின்பால் யாதுங் கருத்தில்லா ஒருவன்போல் இயற்கைநயம்பட வுரைத்த இது சங்கைக் கிடங்கொடாச் செம்மைவாய்ந்தது. தயரதன்குலத் தலைவன் யாரென்பது அறிந்திருப்பானாயின், அன்னான் மனைவி தான் என்று குறித்ததையும் உணர்ந்திருப்பானாயின், இன்னான் மாமகள் அவ்விராமன்மனைவி யென்பதும் உலகறிந்த தாதல் வேண்டுமாதலின், மீண்டும் இவன் 'யாவன் மாமகள்' என்று வினவியதினின்று, உலகத்தோடொன்றும் உறவுகொண்டிலா வொரு அந்தணன் இவனென வுன்னி,

அநகமா நெறிபட ரடிக ளும்மலால்
நினைவதோர் தெய்வம் வேறிலா நெஞ்சினன்
சனகன்மா மகள்பெயர் சனகி காகுத்தன்
மனைவியா னென்றனண் மறுவில் கற்பினாள்.

[மாசற்ற கற்புடைய சீதை, பழுதில்லாத சிறந்த தவநெறியிற் செல்லும் அடிகளே, உங்களைப்போன்ற முனிவர்களன்றி வேறு தெய்வத்தை நினைக்காத மனமுடைய சனகனுடைய மாமகள் நான். என் பெயர் சனகி. காகுத்தன் மனைவியாவேன்—என்றாள்]

ஜனகன் மகளாவதுடன் தான் இராகவன் மனைவியாவதையும் வெளிப்படையாய் விளம்பினாலன்றி இவ்விரகிலா வேதியன் உணர்ந்துகொள்ளான் என்ற நினைவினால் எழுந்த மாற்றமாம் இது. அதுவுமன்றி, 'அன்னவன் பெயரினைத் தெரிகுதிர்' என்றதில் அடங்கிய குறிப்பை உட்கொள்ளமாட்டாமையால் தனக்கோர் நாயகன் இல்லையெனக் கருதி, 'பின் யாவன் மாமகள்' என்று ஆராய்கின்றானோ வென ஐயமெய்திச் சீதை, 'காகுத்தன் மனைவியான்' என்பதையும் கேள்வியையுங்கடந்து சேர்த்துச் செப்பியவளும் ஆகலாம். இப்பொழுதும் நாயகன்றன் இயற்பெயரை இயம்பாமல் குலப்பெயரால் குறித்தது இவளது கற்பின் திறத்தின்பாற்படும். இதன்மேற் சீதை, தன்னை வினவிய முனிவனதுசெய்தியைத் தானும் வினவுவாளாகி,

அவ்வழி யனையன வுரைத்த வாயிழை
வெவ்வழி வருந்தினிர் விளைந்த மூப்பினிர்
இவ்வழி யிருவினை கடக்க வெண்ணினிர்
எவ்வழி நின்றுமிங் கெய்தி னீரென்றாள்

[அப்பொழுது அவ்வார்த்தைகளைக் கூறிய, ஆராய்ந்து அணிந்த ஆபரணங்களையுடைய சீதை, முதிர்ந்த மூப்பை உடையவரே, இங்குத் தவம்செய்து உமது இருவினைகளையும் கடக்க எண்ணினவராய், எங்கிருந்து புறப்பட்டு, கொடிய காட்டுவழியில் வருந்திநடந்து இங்குவந்து சேர்ந்தீர்—என்று கேட்டாள்]

கேட்டதுதான் தாமதம், மடைதிறந்தால் என்ன மண்டி வருகின்றன இராவணன் மொழிகள். தன்னுடைய பெருமைசிறப்புக்களைத் தானே, புனைவேடத்திரையினுள்மறைந்து, மூன்றா மொருவன் பகர்வதே போல், பரக்கப்பேசித் தன்முன் நின்ற மடவரல் மனத்தைக் கவருங் கருத்திற் கிணங்கிவாய்த்த இச்செவ்வியை வழுவவிடான். இந்திரனை வாகனமாய்க் கொண்ட கருஸ்தன் பெயரினைச் சீதை சொன்னதே இவனது கட்டுரையைத் தூண்டித்தரும் சொல்லாயமைந்தது. 'எங்கிருந்து வந்தீர்' என்பதே சீதையின் கேள்வியாயினும் அதற்கு விடை பின்னர்—முன்னர்,



இந்திரற் கிந்திர னெழுத லாகலாச்
சுந்தர னன்முகன் மரபிற் றோன்றினான்
அந்தரத் தோடுமெவ் வுலகு மாள்கின்றான்
மந்திரத் தருமறை வைகு நாவினான்

[இந்திரனுக்கும் இந்திரனா யிருப்பவன். சித்திரத்திலும் எழுதவொண்ணாத வடிவழகுடையவன். பிரம்மனது வமிசத்தில் பிறந்தவன். விண்ணுலகத்தினுடனே எல்லா உலகங்களையும் ஆள்கின்றவன். மந்திரமாகிய அரிய மறைகள் எப்பொழுதும் தங்கிய நாவை யுடையவன்]

ஈசனாண் டிருந்தபே ரிலங்கு மால்வரை
ஊசிவே ரொடும்பறித் தெடுக்கு மூற்றத்தான்
ஆசைகள் சுமந்தபே ரளவில் யானைகள்
பூசல்செய் மருப்பினைப் பொடிசெய் தோளினான்

[சிவபிரான் ஆண்டிருந்த மிகப்பெரிய ஒளிபொருந்திய உயர்ந்த இமயமலையை முன்னொருகால் ஊசி வேரோடும் பறித்தெடுக்கப் புகுந்த ஆற்றலுடையவன். திக்குக்களைச் சுமந்த அளவில்லாப் பெரிய யானைகளின் போர்செய்த தந்தங்களை உடைத்துப் பொடியாக்கிய தோள்களை யுடையவன்]

நிற்பவர் கடைத்தலை நிறைந்த தேவரே
சொற்பகு மற்றவன் பெருமை சொல்லுங்கால்
கற்பக முதலிய நிதியங் கையன
பொற்பக மானநீ ரிலங்கைப் பொன்னகர்

[அவன் அரண்மனை வாயிலில் காவலாளர் ஏவலாளர்களாய் நிற்பவர் தேவர்களே; அவன் பெருமையைச் சொல்லுமிடத்துச் சொற்களும் போதாமல் குறைவுபடும். கற்பகம் முதலிய நிதிகளெல்லாம் அவன்வசம் இருக்கின்றன. அவனுக்கு அழகிய இருப்பிடமாக அமைந்தது பெரிய நீர் சூழ்ந்த பொன்மயமான இலங்கை]

மேனகை திலோத்தமை முதல வேழையர்
வானகந் துறந்துவந் தவன்றன் மாட்சியால்
ஊனமி லடைப்பைகால் வருட லொண்செருப்
பானவை முதற்றொழி லவர தாகுமே.

[இந்திர லோகத்தைவிட்டு வந்து, அவனது பெருமையால், குறைவின்றி அவனுக்கு வெற்றிலைப்பை ஏந்துதல் கால்பிடித்தல் ஒளி பொருந்திய செருப்பை இடுதல் முதலிய ஊழியங்கள், மேனகை திலோத்தமை முதலியதேவ கன்னியர்கள் செய்யவேண்டியனவாம்]

சந்திர னிரவியென் பவர்க டாமவன்
சிந்தனை வழிநிலை திரிவர் தேசுடை
இந்திரன் முதலிய வமர ரீண்டவன்
கந்துடு கோயிலின் காவ லாளரே

[சந்திரன் சூரியன் என்று சிறப்பித்துக் கூறப்படுபவர் அவனுடைய மனத்தின் குறிப்பறிந்து அதன்படி சஞ்சரிப்பார். ஒளியுடைய இந்திரன் முதலிய தேவர்கள் திரண்டு வந்துஅவனது மேகத்தைஅளாவிய அரண்மனையின் காவலாளர் ஆவார்]

பொன்னக ரத்தினும் பொலன்கொ ணாகர்தந்
தொன்னக ரத்தினுந் தொடர்ந்த மாநிலத்
தெந்நக ரத்தினு மினிய வீண்டவன்
நன்னக ரத்தன நவையி லாதன

[பொன் நகரான அமராவதியிலும், அழகுவாய்ந்த நாகலோகத்திலுள்ள பழமையான போகவதி என்னும் நகரத்திலும், இவைகளை அழகிலும் செல்வத்திலும் தொடர்ந்து பெரிய இப்பூலோகத்திலுள்ள எந்த நகரத்தில் ஆயினும் இனிமையிற் சிறந்தவைகளாகி இருக்கும்பொருள்களெல்லாம், இங்கு யாதும் பழுதற்றனவாய் அவனது இலங்கை என்னும் நல்ல நகரத்தை அடைந்தன ஆயின]

தாளுடை மலருளான் றந்த வந்தமில்
நாளுடை வாழ்க்கைய னரி பாகத்தன்
வாளுடைத் தடக்கையன் வாரி வைத்தவெங் [ன்.
கோளுடைச் சிறையினன் குணங்கண் மேன்மையா

[தண்டு உடைய தாமரையில் தங்கியிருக்கும் பிரம்மன் கொடுத்திருக்கின்ற முடிவில்லாத ஆயுளையுடைய வாழ்க்கை யுடையவன். உமையை ஒரு பாகமாகக்கொண்ட சிவபிரான் கொடுத்த வாளை ஏந்திய பெரிய கையையுடையவன். கிரகங்களை யெல்லாம் ஒன்றாய்ச் சேர்த்துப் பிடித்து அடைத்திருக்கின்ற கொடிய சிறைச்சாலையையுடையவன். குணங்களாலும் மேன்மை யடைந்தவன்]

கோள்களை வாரிச் சிறைவைத்ததே தன் குணங்களின் மேன்மைக்கு அடையாளமாம் என்றிவன் கருதினானோ தெரிந்ததில்லை. மந்திரத்து அருமறை வைகும் நாவினனாதலை, இமயத்தைப் பெயர்த்துத் திக்கயங்களின் மருப்பொசித்து, தேவரைத் தன் கடைத்தலை நிறுத்தி, விண்ணின் மாதரை ஏவல்கொண்டு, இரு சுடரையும் திரிவித்துத் தான் நிற்கின்ற வைபவத்தால் நிலைநிறுத்த எண்ணினான் போலும். அல்லது, சூழ்ச்சியுடைய அரிய இரகசியங்கள் தங்கிய நாவினன் தான் ஆதலே குறிப்பினி லுணர்த்தினானோ! அன்னான் இன்னும் எத்தகைய னென்னில்,

வெம்மைதீ ரொழுக்கினன் விரிந்த கேள்வியன்
செம்மையோன் மன்மதன் றிகைக்குஞ் செவ்வியன்
எம்மையோ ரனைவரு மிறைவ ரென்றெணும்
மும்மையோர் பெருமையு முற்றும் பெற்றியான்

[கொடுமை தீர்ந்த நல்ல ஒழுக்க முடையவன். அகன்ற கேள்வி யறிவு உடையவன். நடு நிலைமை தவறாதவன். மன்மதனுங்கண்டு திகைத்தற்குரிய நல்ல பருவமும் அழகும் வாய்ந்தவன். எல்லா உலகங்களிலுமிருக்கின்ற அனைவரும் கடவுளர் என்று எண்ணும் மூன்று மூர்த்திகளினுடைய பெருமை யவ்வளவும் தன்னிடத்தில் நிறைந்த தன்மையுடையவன்]

காரியத்திற் காட்டுதலின்றியே வெம்மைதீர்ந்ததன் ஒழுக்கத்தின் உயர்வு உரைத்தற்குரிய அளவே நிற்றலின் இவனது விரிந்த கேள்வி யறிவுகள் அனைத்தும் அவலமாயதால்,

அனைத்துல கினுமழ கமைந்த நங்கையர்
எனைப்பல ரவன்றன தருளி னிச்சையோர்
நினைத்தவ ருருகவு முதவ நேர்கிலன்
மனக்கினி யாளொரு மாதர் நாடுவான்.

[எல்லா வுலகங்களிலும் உள்ள சிறந்த அழகு வாய்ந்த மாதர் எத்தனையோ பலர் அவனுடைய அருளைப் பெற வேண்டுமென்னும் ஆசையுடையவர்களாயிருக்கின்றனர். நினைத்து நினைத்து இவர்கள் உருகுகின்றாராயினும் அவர்களுக்கு இன்பம்செய்ய உடன்படாமல் தன் மனத்திற்கு இனிய ஒரு மங்கையைத் தேடிக்கொண்டிருக்கின்றான்]

ஆண்டையா னரசுவீற் றிருந்த வந்நகர்
வேண்டியான் சிலபக லுறைய வேண்டினே
னீண்டனெ னிருந்தவற் பிரிந்த நெஞ்சினேன்
மீண்டனெ னென்றனன் வினைய முற்றுவான்

[அன்னவன் சிறப்போடு அரசுசெய்திருக்கின்ற அந்த இலங்கையை விரும்பிச் சில காலம் வசிக்க நினைத்து அங்குச்சென்ற நான் அதனைவிட்டு வர மனங்கொள்ளாமல் நெடுங்காலம் தங்கியிருந்து அதன் பின்னும் அவனை விட்டுப் பிரிந்த துயருடைய மனத்தினோடு திரும்பினேன், என்று தன்காரியத்திற்குரிய தந்திரத்தைக்கருதுபவனான இராவணன் கூறினான்]

கண்டவுட னஞ்சாம லக் காரிகை யமைதிபெற்றிருக்கவும், கூசாமல் தன் மேம்பாட்டைப் பிறனொருவன் பேசுமாபோல் குறைவறக் கூறவும் இயலுமாறு இராவணன் ஈண்டு ஓர் அந்தணவேடத்திலணுகினான் என்பது கம்பர் சித்திரஞ்செய்த நீர்மையால் காணக்கிடக்கின்றது. யாவளேயாயினும் பெண்ணென்று நிற்பாள் ஒருத்தியின் எண்ணத்தைப் பிணிக்காமல் தீராதுகாண் அவ் விலங்கையர்கோன் செல்வநலங்களால் வரும் இன்பநினைவு, என்னுங் கொள்கைபற்றி இவ் வஞ்சனைவேடத்தன் இவைகளை மிகமிகவிளம்பினான். இயலுமேற்சீதைதன்னைநச்சியே உடன்போகவேண்டுமென்று விரும்பிய இது அரக்கமோகத்திலும் பதம் பார்க்கவல்ல பண்பினைக் காட்டுகின்றது. யாவுங் கூறிப்பின், "மனக்கினியா ளொரு மாதர்நாடுவான்" என்ற அவ் வாராய்ச்சிவாசகம் இவன்வாய்நின்றுவருங்கால், தோன்றி விழித்த கண்கள் இரண்டோடு மறைந்திருந்த மற்றைக் கண்கள் பதினெட்டுஞ் சேர்ந்து, "அன்னவள் நான்தான் ஆஞ லமையாதோ" என்னுங் குறி ஏதேனும் முன்னின்ற மங்கையின் முகத்தில் காணப்படுகின்றதோ எனத் துருவியிருக்கும். அஃதொன்றும் அவை கண்டில; ஆதலின், நல்லியல் இல்லா மனைவியுறைகின்ற இல்லிற்குச் சென்ற விருந்தினனென அவன் பார்வை மீள்வதோடு ஊக்கம் குன்றிய வாயின் மொழிகளும் ஒய அவ்வளவில் இராவணன் தன் கட்டுரையையும் முடித்துவிட்டான்.

வான்மீகத்தில் வந்த இராவணன் தான் பூண்டிருந்த வேடந்தான் வீணாகப் பகர்ந்தனனாயினும், வாய்மொழி யொன்றும் வீணாக்காமல், "ஏ, சீதை, என் மனைவியர்களை இனி வெறுத்துவிட்டேன், என்பாலுள்ள பெண்களுக்கு நீ தலைவியாகலாம். நந்தனவனத்தி லுலாவலாம்; ஐயாயிரம் பணிப்பெண்கள் உனக்குத் தருகின்றேன்; வந்துவிடு என்னுடன்" என்று தன் கருத்தை நேரே விளம்புமிதுவோர் பரிகசநாடகம் போன்றே நிகழ்கின்றது. கூறுங் கதை தன் கையிலிருக்கப் பாத்திரங்களின் மன இயக்கங்களுக்குப் பெரிது இடந்தருவானேன் என்னும் நினைப்பினர் வான்மீகமுனிவர். கதையுங் காரியமுமே இடையிடை இதோபதேசங்களுடன் அவருக்குப்போதும். சீதைநெடிது தன் கதையைக் கூறினாள், இராவணன் விரைந்து தன் காரியத்தைப் பார்க்கின்றான். கம்பர் கதையொடு காரியத்தையும் கலைக்குரிய இயற்கையில் இயற்ற நினைப்பவராதலின், இராவணன் புனைந்தவேடத்திற் கொருபொருளும் அவன் நினைந்த காரியத்திற்கோர் நெறியும் நுண்ணிதின் அமைத்துத் தம் நூலினை இயக்குவாராகின்றார்.

# காற்று மழை

## Shakespeare—"The Tempest"

அங்கம் 2. களம் 2.

[539-வது பக்கத் தொடர்ச்சி]

**ட்ரின்குலோ:**—அந்தக் குரலை நான் அறிந்திருக்கவேண்டுமே: அதுதான்—மற்று அவனே முழுகிவிட்டானே. இவை பேய்கள்—ஹோ! என்னைக் காப்பாற்றுங்கள். (1)

**ஸ்ட்டிபானே:**—கால் நான்கு, குரல்கள் இரண்டு—நனிமிக இரசமான விரூபி இது! (2). இதன் முன்குரல் இப்பொழுது தன் நண்பனை நன்கு பாராட்டுதற் கமைந்திருக்கின்றது; நிந்தனைச் சொற்களைப் பேசிப் புறங்கூறுதற் கமைந்தது இதன் பின்குரல் (3). இவன் நோய்தீர என் புட்டியிலுள்ள சாராயம் அத்தனையும் வேண்டுமாயினும் நான் இவன் குளிர்ச்சுரத்திற் குதவிசெய்வேன்—இந்தா, [காலிபனுடைய வாயில் சாராயம் வார்க்கின்றான்]—இவ்வளவு போதும் (4)! உன்னுடைய மற்ற வாயில் இனிச் சிறிது ஊற்றுவேன்.

**ட்ரின்குலோ:**—ஸ்ட்டிபானே!—

**ஸ்ட்டிபானே:**—உன்னுடைய மற்ற வாயா என்னைக் கூப்பிடுகின்றது?—ஐயோ, என்ன செய்வேன்! இது வோர் பேயே, விரூபியன்று: இதனைவிட் டகன்றோடுவேன்; என் கையில் நீண்டதோர் கரண்டி இல்லை (5).

**ட்ரின்குலோ:**—ஸ்ட்டிபானே! நீ ஸ்ட்டிபானே ஆயின், என்னைத்தொடு, என்னுடன் பேசு; ஏனெனில், நான் ட்ரின்குலோ,—பயப்படாதே—நின் நல்ல நண்பன் ட்ரின்குலோவே.

**ஸ்ட்டிபானே:**—நீ ட்ரின்குலோவாகி இருப்பாயாயின் வெளியே வா. சிறிய கால்களால் நின்னை இழுப்பேன். ட்ரின்குலோவின் கால்க ளென்று எவையேனும் இருக்குமாயின் இவைகளே அவை (6). [ட்ரின்குலோவை வெளியே இழுக்கின்றான்] நிச்சயம், அதே ட்ரின்குலோதான் நீ. எவ்வாறு நீ இங்கு இருக்கவர லாயிற்று?

**ட்ரின்குலோ:**—(தனக்குள்) இடி விழுந்து இறந்தான் இவனென்று எண்ணியிருந்தேன்—(வெளிப்படையாக) மற்று, மூழ்கி நீ சாகவில்லையோ, ஸ்ட்டிபானே? நீ மூழ்கிவிடவில்லை என்று இப்பொழுது நான் நம்புகின்றேன். கடுங் காற்றெல்லாம் அடித்துத் தீர்ந்ததா? காற்றுமழைக்கு அஞ்சி நான் செத்த இம் மதிமறியின் அங்கியின்கீழ் ஒளிந்துகொண்டேன் (7). மற்று, நீ உயிரோ டிருக்கின்றாயோ ஸ்ட்டிபானே? ஓ ஸ்ட்டிபானே, நேப்ல்ஸ் நகரத்தவர் இருவர் தப்பினர். (8)

**ஸ்ட்டிபானே:**—என்னைச் சுழற்றாதே; என் வயிறு நிலையில் இல்லை. (9)

**காலிபன்:**—(ஒருபுறமாக) சைத்தான்கள்தாம் அல்லவாயின் இவைகள் நல்லவைகளே.' தீரம் மிக்க தெய்வம் அது, துறக்க நாட்டு மதுவையும் வைத்துக்கொண் டிருக்கின்றது. முழங்காற் படியிட்டு அவனை யான் பணிவேன். (10)

**ஸ்ட்டிபானே:**—எப்படித் தப்பினாய், எப்படி நீ இங்கு வந்தனை? எப்படி நீ இங்கு வந்தாயென்பதை இப்புட்டியின்மீது ஆணைவைத்துச் சொல். கப்பலாட்கள் எறிந்துவிட்ட வொரு சாராய பீப்பாமீது நான் தப்பினேன்; கரையில் ஒதுக்கப்பெற்றபிறகு ஒரு மரத்தின் பட்டையைக்கொண்டு என் கைகளாலேயே செய்த இப்புட்டியின்மீது ஆணை. (11)

**காலிபன்:**—உனக்கு நான் உண்மைக்குடியா யிருப்பேனென்று அப்புட்டியின்மீது ஆணையிடுவேன். அந்தப் பானமோ இந்த உலகத்தினது அன்று. (12).

**ஸ்ட்டிபானே:**—இந்தா, நீ எப்படித் தப்பினையென்பதை இனிச் சத்தியஞ்செய்து சொல். (13).

**ட்ரின்குலோ:**—குழறிபோல், ஐயா, நீந்தி நான் கரைசேர்ந்தேன்: குழறிபோல் என்னால் நீந்தக்கூடும், சத்தியம். (14).

**ஸ்ட்டிபானே:**—இந்தா, இப்புத்தகத்திற்கு முத்தங்கொடு. (15) [ட்ரின்குலோ புட்டியிலிருந்து குடிக்கின்றான்]. குழறியைப்போல் நீந்தக்கூடுமாயினும் நீ கழுதையைப் போன்றே அமைக்கப்பட்டிருக்கின்றாய். (16).

**ட்ரின்குலோ:**—ஓ ஸ்ட்டிபானே, இன்னும் உளதோ இது? (17).

**ஸ்ட்டிபானே:**—பீப்பா நிறைய இருக்கின்றது ஐயா. கடற்கரை யருகு ஓர் பாறையில் இருக்கின்றது என் சாராயக் கிடங்கு; அவ்விடத்தே என் சாராயத்தை ஒளித்து வைத்திருக்கின்றேன்—ஏ, மதிமறியே, இப்பொழு தெப்படி? உன் குளிர்ச்சுரம் எவ்வா றிருக்கின்றது? (18)

**காலிபன்:**—வானின்று நீவந் திறங்கினாய் அல்லையோ?

**ஸ்ட்டிபானே:**—சந்திரனிலிருந்து வந்தேன், நிச்சயம்; முன்னொரு காலத்தில் மதியத்தில் இருந்த மனிதன் நான்தான். (19).

**காலிபன்:**—நானுன்னை அதனில் கண்டிருக்கின்றேன். ஆதலின் உன்னை ஆராதிக்கின்றேன். உன்னையும் உன் நாயையும் உன் முட்புதரையும் என் எசமானி எனக்குக் காட்டியிருக்கின்றாள். (20).

(1) காலிபனோடு பேசின ஸ்ட்டிபானேவின் குரலைக் கேட்டு ட்ரின்குலோ கூறியது இது. ஸ்ட்டிபானே கடலில் மூழ்கிவிட்டான் என்று இவன் எண்ணியிருப்பதால் இது பேயாக இருக்கவேண்டும் என்று அஞ்சித் 'தெய்வங்காள் என்னைக் காப்பாற்றுங்கள்' என்று வேண்டுகின்றான்.

(2) காலிபனின் அங்கியினுள் ட்ரின்குலோவின் உடல் மறைந்திருப்பதால், ஸ்ட்டிபானேவிற்கு அவன் கால்கள் மாத்திரம் தெரிகின்றன. அவன் குரல் மாத்திரம் கேட்கின்றது. உடல்தெரியவில்லை. இவைகளும் காலிபனைச் சேர்ந்தவைகளே என்று எண்ணி இவன், நான்கு கால்களும்' இரண்டு குரல்களுமுடைய விரூபி, ஆச்சரியத்திலும் ஆச்சரியமானது என்று வியந்து, பார்ப்பவர்க்கு மிக்க இரஸமாகக்கூட இருக்கும் என்று மதிக்கின்றான்.

(3) இவ்விரூபிக்கு இருக்கின்ற இருவேறு குரல்களின் காரியம் யாவதா யிருத்தல்கூடும் என்று ஸ்ட்டிபானே ஊகிக்கின்றான். உபகாரம்செய்யும் என்னை எனக்கு முன்னே புகழ்ந்து பேசுவதற்கு ஒரு குரலும், பிறகு எனக்குப் பின்னே என்னைப் பழிப்பதற்கு மறு குரலும் பயன்படும் என்கின்றான். பொதுவுற எல்லா மனிதருக்கும் இவ்வண்ணம் இரண்டு குரல் அல்லது இரண்டு நாக்கு இருந்து, உரத்துப் புகழ்ந்து மெல்லப் பழிக்க நேர்வதை ஸ்ட்டிபானே காலிபனைக் குறித்துரைக்கும் இவ்வாசகத்தால் ஷேக்ஸ்பியர் பரிகசிக்கின்றார்.

(4) புட்டியிலிருந்து காலிபன் சாராயத்தை வேகமுடன் உறிந்துகொள்ளவே, இவ்வாறு பரிகசமாய்க் கூறுகின்றான்.

(5) "பேயோடு புசிப்பதற்கு நீளமான கரண்டி வேண்டும்" என்பது ஆங்கிலப் பழமொழிகளில் ஒன்று. ஒரே தட்டிலிருந்து எடுத்து, தானும் பேயும் சாப்பிடவேண்டுமானால், மிக்க தூரத்தில் விலகிஇருந்தே அந்தக் காரியம் செய்வது நலமாதலின், தான் எடுத்துச் சாப்பிடுங்கரண்டியும்நீளமாயிருக்கவேண்டுவது அவசியம். நெருங்கிஉட்கார்ந்தால் ஆபத்து நேரலாம். அத்தகைய நீண்ட கரண்டி என் கையில் இல்லாமையால் நான் ஓடிவிடுவேன்-என்று அப் பழமொழியைத் தழுவிக் கூறுகின்றான்.

(6) தன்முன் காண்கின்ற இரண்டு ஜதைக் கால்களில் சிறிய அளவுள்ளவைகளே ட்ரின்குலோவின் கால்களாக இருக்கவேண்டுமென்று அவைகளைப்பற்றி இழுக்கின்றான்

(7) மதிமறி - moon-calf - உருவம் சிதைந்த பிண்டம். மதி - சந்திரன், மறி - கன்று. சந்திரனாகிய கிரகத்தின் ஆட்சியில் கருவுற்றவர், உருவம் சிதைந்த விரூபப் பிண்டமாகப் பிறப்பார்கள் என்பது மேனாட்டு ஜோதிட நம்பிக்கைகளில் ஒன்று. ஆதலின் ஆபாசவடிவுடைய விரூபிகளை 'மதிமறி' என்று அழைப்பர். இங்குக் காலிபனை ட்ரின்குலோ 'மதிமறி' என்று குறிக்கின்றான்.

(8) குடிகார ஸ்ட்டிபானேவும் கோமாளி ட்ரின்குலோவும் உயிர்தப்பாமற்போனால் நேப்லஸ் நகரத்தின் சிறப்பு மறைந்துவிடும் என்று அஞ்சினவன்போல் தாம் பிழைத்ததற்குக் குதூகலம் கொள்கின்றான்.

(9) ஸ்ட்டிபானேதானேவென்று அவனை ட்ரின்குலோ சுழற்றிச் சுழற்றிச் சோதித்தவனாதல்வேண்டும். குடியினால் குழம்பியிருப்பதால் வயிறு நிலையில் இல்லை.

(10) மதுவின் சுவையை முதன்முதலாக அறிந்த காலிபன் அதன்பால் மோகங்கொண்டு அதனை வைத்திருக்கும ஸ்ட்டிபானேவைத் தெய்வமாகவே கருதி வணங்குகின்றான். துறக்க நாடு-தெய்வலோகம்.

(11) ட்ரின்குலோவை ஆணைவைக்கச் சொன்னபடி ஸ்ட்டிபானேவும் அப் புட்டியின் மீது ஆணைவைத்துத் தான் தப்பிய விதத்தைச் சொல்கின்றான். அப்புட்டியைத் தானே ஒரு மரப்பட்டையால் செய்தானென்றுந்தெரிவிக்கின்றான்.

(12) களிப்பின் மிகுதியால் காலிபன், ஸ்ட்டிபானேவைத் தன் அரசனாகக்கொண்டு தான் அவனுக்குக் குடியாளாக உடன்படுவதை விளம்புகின்றான். ஸ்ட்டிபானே அவ்வார்த்தைகளைத் தன் காதிற்போட்டுக்கொள்ளாமல், ட்ரின்குலோவை நோக்கியே பேசுகின்றான்.

(13) இந்தா, என்பது புட்டியை ட்ரின்குலோவிற்குக் கொடுக்க நீட்டுவதைக் குறிக்கின்றது.

(14) குழறி-வாத்து-duck, (இந்தச் சொல் இப்பொருளில் நாமதீப நிகண்டில் மாத்திரம் காணப்படுகின்றது.)

(15) புத்தகம் என்பது இங்குப் பரிகசமாகப் புட்டியைக் குறிக்கின்றது. கிறிஸ்தவர்கள் சத்தியம் செய்வதற்கு அடையாளமாகத் தங்கள் வேதபுத்தகமாகிய பைபிலிற்கு முத்தம்கொடுக்கின்ற வழக்கத்தைத் தழுவி இப் பரிகசம் ஸ்ட்டிபானேவின் வாயில் எழுகின்றது.

(16) இங்கு, முதனூலின் பரிகசம் தமிழிற் கேற்றபடி மொழிபெயர்ப்புச் சிறிது மாறியிருக்கின்றது. 189

(17) இது - இந்தச் சாராயம்.

(18) மதிமறி என்று ட்ரின்குலோ வைத்த பேரால் ஸ்ட்டிபானே காலிபனைக் கூப்பிடுகின்றான்.

(19) ஸ்ட்டிபானேவைக் காலிபன் ஓர் தெய்வமாகப் பாவித்து, நீ வானுலகிலிருந்து வந்திருக்கின்றாய், என்று வியந்து பாராட்டுவதுகாண, ஸ்ட்டிபானே, "ஆம், ஆம், வானத்திலுள்ள சந்திரனிலிருந்து வந்திருக்கின்றேன்" என்று காலிபனுக்கு உண்மை உரைப்பவன்போல் பரிகசிக்கின்றான். மதியம் - சந்திரன். சந்திரனில் ஒரு மனிதன் உண்டென்றும், அவன், கையில் ஒரு முட்புதரைச் சுமந்துகொண்டு, நாய் ஒன்று பின்தொடரத் திரிவானென்றும் கூறுவது மேனாட்டார் மித்தைகளில் ஒன்று.

(20) எசமானி - மிராண்டா. இது முழுப் பொய்யாயிருக்கவேண்டும். ஸ்ட்டிபானே சொன்ன பொய்யை நம்பியதுமன்றிக் காலிபன் இம்மூடனைத் தான் சந்திரனில் பார்த்திருக்கின்றானென்றும் சாதிக்கின்றான். அல்லது, மிராண்டா, சந்திரனில் உள்ள களங்கத்தைக் காட்டி, அவள் தன் தந்தையினிடமிருந்து கற்றிருக்கக்கூடிய அம் மித்தையின்படி, நாயும் புதரும் கொண்டு நடக்கும் மனிதனென்று அக்களங்கத்தை எப்பொழுதேனும் கூறியிருப்பினும் இருக்கலாம். அவள் சொல்லியிருப்பதோடு இப்பொழுது ஸ்ட்டிபானே சொல்வது பொருந்துவதால் காலிபனது நம்பிக்கை பலப்படுகின்றது.

(21) 'என்னைச் சந்திரனில் நீ கண்டது உண்மை' என்பதற்கு ஆணைவைக்கச்சொல்லி, புத்தகமென்று முன்போலப் புட்டியை நீட்டுகின்றான்.

(22) நல் ஒளியே கரியாக - தனி கண்களே சாக்ஷியாகக் கூறுகின்றான்—அது என்னவெனில், இந்தக் குரூபிக் காலிபன் முழு மடையன், என்று இகழ்ந்து "இதற்கு நான் அஞ்சுவேனா" என்று வீரமும் பேசிக்கொள்கின்றான். நொய்ய - பலமற்ற. மதியத்திருந்த மனிதனென்று ஸ்ட்டிபானேவை நம்புகின்ற இவனுக்கு எத்தனை புத்தி யிருக்கக்கூடும்—என மீண்டும் இகழ்கின்றான்.

ஸ்டிபானோ:—வா வா, அதற்கு ஆணை வை; புத்தகத்திற்கு முத்தங்கொடு (21)—பின்னர் நானதனைப் புதிதுவிட்டு நிறைத்துக்கொள்வேன். சத்தியஞ்செய். [காலிபனுக்குச் சாராயங் கொடுக்கின்றான்].

ட்ரின்குலோ:-இந் நல்லொளியே கரியாக, இதுவோர் முழுமூட விரூபி! நானோ இதற்கு அஞ்சுவேன்! மிக நொய்ய விரூபி - மதியத்திருந்த மனிதன்! மிக எளிதில் எதனையும் நம்பிவிடும் ஓர் பேதை விரூபி! விரூபியே நன்கு உறிஞ்சினாய், நனிமெய். (22)

காலிபன்:—இத்தீவின் செழிப்புடைய அங்குலம் ஒவ்வொன்றையும் உனக்கு நான் காட்டுவேன்; உன் காலிற்கு முத்தமுங் கொடுப்போன்; வேண்டுகின்றேன், என் தெய்வமா யிரு.

ட்ரின்குலோ:—இவ்வொளியே கரி, வெறி கொண்டவொரு மிகமிக வஞ்சக விரூபி! தன் தெய்வந் துயிலும்போது அத்தெய்வத்தின் புட்டியைத் திருடிக் கொள்வான் இவன் (23).

காலிபன்:—உன் அடிகளுக்கு முத்தம் இடுவேன்; உனக்கு அடங்கிய குடியாக நான் ஆணைவைக்கின்றேன்.

ஸ்டிபானோ:—எனின் வா; விழு கீழே, ஆணை வை.

ட்ரின்குலோ:—இக் குட்டிநாய்த்தலைக் குரூபியைக் காண நான் சிரித்துச் சிரித்துச் செத்துவிடுவேன். சொறிபிடித்த விரூபி இதனில் வேறில்லை; இவனைப் புடைப்பதற் கிதயம்வரக் காண்பேனேனும்-(24)

ஸ்டிபானோ:—வா, முத்தமிடு.

[காலிபனுக்குச் சாராயம் கொடுக்கின்றான்.]

ட்ரின்குலோ:—இவ் வேழை விரூபி குடிவெறியி லிருக்கின்றதே. அருவருக்கு மொரு ஆபாச விரூபி!(25).

காலிபன்:—நனி சிறந்த நீரூற்றுக்களை நானுனக்குக் காட்டுவேன். சிறு பழங்கள் நானுனக்குப் பறித்துத் தருவேன். உனக்காக மீன் பிடிப்பேன், வேண்டிய விறகு உனக்கு யான் கொண்டுவருவேன் — நான் ஆட்செய்யும் அக் கொடியோனைக் கொள்ளை நோய் கொண்டகல்க! இனி யொரு குச்சியும் நானவனுக்குச் சுமக்க மாட்டேன். மற்று, அற்புதப் புருடனே உன்னையே தொடர்வேன். (26)

ட்ரின்குலோ:—ஏழைக்களியனைப் பெரிய அற்புதமாக் குகின்றவொரு மிகமிக நகுதற் குரிய விரூபியே இவன்! (27)

காலிபன்:—பழங்கள் வளருமிடத்திற் குன்னை அழைத்துச் செல்வேன். நீண்ட வென் நகங்களால் உனக்கு யான் வேர்க்கடலை அகழ்ந்து நல்குவேன்; குருவிக் கூடுகள் காட்டித்தருவேன். விரைவுடைய குரங்கினை வஞ்சித்து வலைப்படுத்தும் வகைகளை நானுனக்குக் கற்றுக்கொடுப்பேன். கொட்டைகள் கொத்துடைய காட்டுச்செடிகளிடை உன்னை இனிதுகொண்டேகுவேன். பாறையினின்று பறவைகள் நானுனக்குச் சிலபோது பற்றித்தருவேன்—என்னுடனே வருவாயோ? (28)

ஸ்டிபானோ:—நன்று, மேலினி யொன்றும் பேச்சின்றி அழைத்துச் செல். ட்ரின்குலோ, அரசனும் நம்முடன் வந்தவர் அனைவரும் மூழ்கிவிட்டனராதலால் நாமே இங்கு உரிமைகொள்வோம் (29) இந்தா, என் புட்டியைச் சுமந்து வா: ஐயா, ட்ரின்குலோ, சற்றே பொறுத்து அதனை மீண்டும் நிறைத்துக்கொள்வோம் (30).

காலிபன் ஸ்டிபானோவைப் பாராட்டுவதுகாண ட்ரின்குலோவிற்கு ஒருவாறு பொறாமை உண்டாகின்றது.

நன்கு உறிஞ்சினாய் - புட்டியிலிருந்து சாராயத்தைக் காலிபன் பருகிய வேகத்தைக் குறித்துச் சொன்னது. நனி மெய் - அது மிகவும் உண்மை.

(23) சாராயம் வைத்திருப்பதாற்றான் ஸ்டிபானோவைக் காலிபன் தெய்வமாகக் கொண்டாடுகின்றானாதலின், அதனைத் திருடிக்கொள்வதே இவ் வஞ்சகக் குரூபியின் நோக்கமாயிருத்தல் வேண்டும்—என்பது பொருள்.

(24), (25). இவனை நன்றாக அடிக்கவேண்டுமென்று விரும்புகின்றேனாயினும், குடிவெறிகொண்டிருக்கும்போது அடிப்பதற்கு மனம் வரவில்லை—எனச் சேர்த்துக் கொள்க.

(26) கொடியோன்—ப்ராஸ்ப்பீரோ.

(27) களியன் - கள்வெறிகொண்டவன். ஸ்டிப்பானோவை அற்புத மனிதனாகக் கொள்கின்ற காலிபனது மடமையை ட்ரின்குலோ இகழ்ந்து சிரிக்கின்றான். மேலும், தன்னைவிட்டு ஸ்டிபானோவையே காலிபன் கொண்டாடுவதைக்காண ட்ரின்குலோவிற்கு உண்டான பொறாமை அதிகமாகின்றது.

(28) ஸ்டிபானோ தன்னை ஆட்கொள்வானாயின் தான் அவனுக்குச் சுவையுடைய பற்பல பழங்கள் கொட்டைகள் மீன்கள் பறவைகள் முதலியன கொடுத்துப் பற்பல விதங்களில் தொண்டுசெய்ய ஆயத்தமாயிருக்கின்றான் என்பதைக் காலிபன் இங்கு எடுத்துக்காட்டுகின்றான். ஸ்டிபானோவின் கையிலுள்ள சாராயபுட்டியே காலிபனுக்கு இத்துணை ஊக்கம் ஊட்டுகின்றதென்பதைச் சொல்லவேண்டா. கல்வியும் அறிவும் புகட்டிக் காலிபனையோர் மனிதனாக்க முயன்றான் ப்ராஸ்ப்பீரோ. அதற்குப் பதிலாகக் காலிபன் அவனை வெறுத்ததுமன்றி, மிராண்டாவின் மானத்தை அழிக்கவும் முயன்றான்..கொடியோன் என அவனைக் கூறுகின்றான். மற்று, கள் அனைய போகங்களைக் கொணர்ந்து தந்த இக் குடிகார பட்லரைத் தெய்வமென்று கொண்டாடி அவன் கால்களை நக்கி அடிமை செய்ய இங்குப்புகுகின்றான் காலிபன். மனிதர்களிடையே நடைபெறும் இயக்கங்கள் பலவற்றுள் இந்த முழுமூடக் கீழ்மையே உறைந்திருக்கும் நுண்மையைக் கருதுங்கால், காலிபனைக் கற்பனைசெய்த ஷேக்ஸ்பியரின் திறமையின் நுட்பமும் அறிவினது அகலமும் திகழத் தோன்றும்.

(29) (30) இந்தத் தீவைத் தன்னுடைமையாகக் கொண்டு தானே அரசனாகி ஆள்வதற் கமைகின்றான் ஸ்டிபானோ. 'நாம்' என்றதை ட்ரின்குலோவையும் ஆட்சியில் சேர்த்துக்கொண்ட உளப்பாட்டுத் தன்மைப் பன்மை என எண்ணுவதோ அல்லது அரசர்போன்றவர்க்கு உரிய உயர்வுப்பன்மை இப்பொழுதே குடிகார ஸ்டிபானோவின் வாயில் தோன்றத் தலைப்படுகின்றது என்று கொள்வதோ—நிச்சயமாகத் தெரியவில்லை. 'புட்டியைச் சுமந்து வா' என்று கொடுத்தது யார் கையில் என்பதும் குறிக்கப்பெற்றிலது. ட்ரின்குலோ புட்டி சுமப்பதாயின் அவனை ஸ்டிபானோ தன்னுடன்கூட ஆட்சிசெய்பவனாகக் கருதியிரான். ஆயினும் சற்றே பொறுத்து நிறைத்துக் கொள்வோம் என்று கூறுவதால், கையில் வாங்கிய புட்டி வெறும் புட்டியா யிருக்கக்கண்டு ஒருவாறு முகங் கோணிய ட்ரின்குலோவிற்கு இது ஏற்றவுரை ஆதல் பற்றி, அவன் கையிலேயே ஸ்டிபானோ புட்டியைக் கொடுத்தானென்று எண்ண இடம் ஏற்படுகின்றது. இதுவுமன்றி, 'ஐயா ட்ரின்குலோ' என்பதற்கு முதல்நூலில் 'Fellow Trinculo' என்னும் தொடர் இருக்கின்றது. Fellow, என்பதற்கு ஆங்கிலத்தில், ஒத்த நிலையில் உள்ள கூட்டாளி என்றும் தன்னைவிடத் தாழ்ந்தவன் என்றும் இருவேறு பொருள்கள் இருக்கின்றன. எந்தப் பொருளில் ஸ்டிபானோ அழைத்தான் என்பதும் சந்தேகமே. (தமிழில் ஒருவாறு அவ்விரு பொருள்களையும் தழுவி 'ஐயா' என்னும் சொல் பயிலப்படுகின்றது.)

இவ்வாறு சொற்கள் ஒருவழிப்படாமல் நிற்பதுபோன்றே ஸ்டிபானோவின் மனநிலையும் இருந்ததுபோலும். தான் எய்திய அப் புதிய அரசில் ட்ரின்குலோவைக் கூட்டாளியாகக் கொள்வதுபோல் துவக்கித் தன்னை யறியாமலே அவனைத் தனக்குக் கீழ்ப்பட்டவனாக வைக்கப் பார்க்கின்றது ஸ்டிபானோவின் மனம். அரசியல் கட்சிகளில் கூட்டாளிகளாய்த் துவக்குபவர்செய்தியை இதனிற் காணலாம்.



காலிபன்:—(மதுவெறிகொண்டு பாடுகின்றான்)

தருக தருக எசமானே
செலவு தருக இப்பொழுதே.

ட்ரின்குலோ:—ஊளையிடும் விரூபி; உண்டாடும் விரூபி!

காலிபன்:—(பாடுகின்றான்)

மீனுக் கணையோ இனிக்கட்டேன்
வேண்டும் விறகோ இனிக்கொணரேன்
நானே சட்டி இனிச்சுரண்டேன்
இனியோர். தட்டும் நான்கழுவேன்
பான் பான் கக்காலிப்பான்
புதிய எசமான் பெற்றேனைப்
போனேன் போனேன் இனிமேல்நீ
புதிய ஆளைத் தேடிக்கொள். (31)

விடுதலை, அடேயடே! அடேயடே, விடுதலை! விடுதலை, அடேயடே, விடுதலை! (32)

ஸ்டிபானோ:—ஓ வீர விரூபி! வழிகாட்டிச் செல்.

[போகின்றனர்.]

(31) புதிய எசமான்—ஸ்டிபானோ. நீ என்றது ப்ராஸ்ப்பீரோவைக் குறித்துச் சொன்னது.

பான் பான் கக்காலிப்பான்—குடி வெறியும் விக்கலும் களிப்புஞ் சேர்ந்து, காலிபன் தன் பேரை இப்படி உச்சரிக்கும்படி செய்கின்றன. காலிபன், என்பதிலுள்ள பன் என்பது பான் என நீண்டு, ஈற்று னகர மெய் அளபெடுத்துப் பான்ன், என்று ஆயிற்று. 'கக் காலிப் பான்,' என்று அவன் பெயர் விக்கல்களுக்கிடையே சிதைந்து வருகின்றது.

(32) ப்ராஸ்ப்பீரோவைப் போன்றவர்களுடைய ஆதரவை விட்டு ஸ்டிபானோ போன்றவர்களுக்கு அடிமை செய்யப் புகுவதே விடுதலை என விவகரிக்கும் கீழ்மையை ஷேக்ஸப்பியர் காலிபன் திறத்தில் நன்கு காட்டுகின்றார். காலிபனைப்போல் கீழ்நிலையிலுள்ளவர்களுடைய மதியீனம் மட்டுமே இதுவென்று எண்ண வேண்டா. மேல் நிலையிலுள்ளவர்களென்று மதிக்கப்படுகின்றவர்களும் விடுதலை வீரங்கள் பேசப்புகுங்கால் காலிபனிலும் உயர்ந்தவர்களல்லர் என்பதை ஷேக்ஸ்ப்பியர் தம் 'ஜூலியஸ் ஸீஸர்' என்னும் நாடகத்தில், ஸீஸரைக்கொன்று வீழ்த்தியவுடன், ப்ரூட்டஸ் காஸ்ஸியஸ் அனையவர், "விடுதலை சுதந்தரம்" என்று கூக்குரல் இட்ட செவ்வியில் காட்டியிருக்கின்றார். (அந்நாடகம் இவ்விதழில் சென்ற ஆண்டு மொழிபெயர்ந்து வந்திருக்கின்றது.)

இரண்டாம் அங்கம் முற்றிற்று

# நம்மாழ்வார் வைபவம்

## திருவாய்மொழி

[545-வது பக்கத் தொடர்ச்சி]

5-ம் பத்து, 5-ம் தசகம்

7-ம் பாசுரம்

நிறைந்தவன் பழிநங்குடிக் கிவளென்றன்னை
காணக்கொடாள்
சிறந்தகீர்த்தித் திருக்குறுங்குடி நம்பியைநான்
கண்டபின்
நிறைந்தசோதி வெள்ளஞ்சூழ்ந்த நீண்டபொன்
மேனியொடும்
நிறைந்தென்னுள் ளேநின்றொழிந்தான் நேமியங்
கையுளதே.

குறிப்பு:—வைகுண்டத்தில் அமர்ந்திருக்கின்ற பகவானது திருமேனி சுத்த ஸத்துவம் என்கிற பரிசுத்த சூக்ஷ்மவஸ்துவாம். மனிதர் திருக்கோயில்களில் அமைக்கும் விக்கிரகங்களையும் அதேவிதத் திரவியத்தால் தான் அமைத்துப் பூஜை செய்யவேண்டுமென்பதுவிதி. எனினும், சுத்த சத்துவமான திரவியம் வைகுண்டத்திற்கே உரியதாக, அதனைக்கொண்டு இவ்வுலகில் விக்கிரகங்கள் எவ்வாறு செய்ய இயலும் என்ற சங்கை தோன்றலாம். இதனை விளக்கவேண்டும். கல் முதலியவைகளால் கோவில் விக்ரகங்களை மனிதர் அமைத்தாலும், திருப்பிரதிஷ்டை செய்யும் ஸமயத்தில், பகவானை அழைத்துக் கோவில்கொள்ளும்படி பிரார்த்திக்குந் தபோநிஷ்டனானவன், தன்னையே காருடத்தில் நிறுத்தி மந்திரபலத்தாலும் யோகபலத்தாலும், பகவான் தன் சுத்த ஸத்து வஸ்துவினோடு திருவிக்கிரகத்தினுள் ஆவேசிக்கும்படி செய்தானென்று அறிந்து கொள்ளலாம்.

அன்னைமார் தன்னைக் குலப்பழியென்று அவதூறு கூறுவாரென்று இதுகாறும் நினைத்து வருந்திய இப்பிராட்டி, இந்தப் பாசுரத்தில், "திவ்வியமங்கள விக்கிரகமான நம்பியின் திரு ஆழி பிடித்திருக்கும் அழகு, அவனது இயற்கைச் சோபையிலும் அதிகமாக இருப்பதால் அது என்நெஞ்சு முழுதும் குடிகொண்டிருக்க நான் இந்தக் காட்சியினின்று மீண்டுச் சொந்த சித்த விருத்தியில் எங்ஙனம் திரும்புவேன்" என்று சந்தேகிக்கின்றாள்.

8-ம் பாசுரம்

கையுள்நன்முகம் வைக்குநையு
மென்றன்னையரு முனிதிர்
மைகொண்மாடத் திருக்குறுங்
குடிநம்பியைநான் கண்டபின்
செய்யதாமரைக் கண்ணுமல்குலுஞ்
சிற்றிடையும் வடிவும்
மொய்கொணீள்குழல் தாழ்ந்ததோள்களும்
பாவியேன்முன் னிற்குமே.

உரை:—நான் என் முகத்தைக் கையுள்வைத்துத தளர்கின்றேன் என்று தாய்மார்களே நீங்கள் கோபங் கொள்கிறீர். மேகத்தை அளாவிய திருக்குறுங்குடியிலுள்ள நம்பியை நான் கண்டபின், அவனது, செந்தாமரைக் கண்ணும் அகன்ற நிதம்பமும் சிற்றிடையும் வடிவும் அடர்ந்து நீண்ட குழல்புரளும் தோள்களும் பாவியேன் என் மனத்தில் நின்று வாட்டுகின்றனவே.

9-ம் பாசுரம்

முன்னின்றாயென்று தோழிமார்களு
மன்னையரு முனிதிர்
மன்னுமாடத் திருக்குறுங்குடி
நம்பியைநான் கண்டபின்
செய்யநீண்முடி யாதியாய
வுலப்பிலணி கலத்தன்
கன்னல்பாலமு தாகிவந்தென்
னெஞ்சங் கழியானே.

பொழிப்புரை:-ஒரு நாளும் பிறர் காணவொண்ணாதபடி நடந்துகொள்ளவேண்டிய பெண்தன்மையை

புடைய நீ கண்காண நிற்பதே, என்று தோழிமாரும் தாய்மாரும் திரளநின்று நலியாநின்றீர்கள். ஸ்திரமான வீடுகள் மாடங்கள் நிறைந்த திருக்குறுங்குடியில் நம்பியை நான் கண்டபின், சிரசில் தரித்த கிரீடபுக்தமாய்க் கணக்கிடக்கூடாத திவ்விய ஆபரணங்களுடைய சேர்த்தியாலே, கற்கண்டையும் பாலையும் கலந்து புசித்தால்போல் என் நெஞ்சில் வந்து எனக்கு மறக்கவொண்ணாதபடி ஒரு க்ஷணமும் என் ஹிருதபத்தை விட்டுப் போகின்றவன் அல்லன், என்கிறாள் —ஆறுயிரப்படி.

குறிப்பு:—கன்னல் பால் அமுது - கன்னலும் பாலும் அமுதும் கலந்தது அல்ல, பாலையே 'அமுது' என்று உபசாரமாகக் கூறியபடி. உலப்புஇல் - அளவு இல்லாத.

---

10-ம் பாசுரம்

கழியமிக்கதோர் காதலளிவ
ளென்றன்னை காணக்கொடாள்
வழுவில்கீர்த்தித் திருக்குறுங்குடி
நம்பியைநான் கண்டபின்
குழுமித்தேவர் குழாங்கள்கைதொழச்
சோதிவெள்ளத்தி னுள்ளே
எழுவதோருரு வென்னுஞ்சு
ளெழுமார்க்கு மறிவரிதே.

பதக்குறிப்புக்கள்:—கழியமிக்க காதலள் - நாள் செல்லச் செல்ல மிகுகின்ற ஆசையை யுடையவள். வழுவு இல் கீர்த்தி - புரையற்ற கீர்த்தி. காணக் கொடாள் - அநுசந்திக்க இடங்கொடுக்கமாட்டாள். குழாம் - கூட்டம். குழுமி-கூடி. சோதி வெள்ளத்தினுள்ளே - முன் ஏழாம் பாசுரத்தில் சொன்னபடி, காந்திப் பிரவாகத்தினுள்ளே. எழுவது ஓர் உரு - தோன்றி எழுகின்றது ஓர் ஆச்சரியமான உருவம். என் நெஞ்சுள் எழும் - என் மனத்தினுள் பிரகாசிக்கின்றது. ஆர்க்கும் அறிவு அரிது-எவராலும் அதைத் தெரிந்து கொள்ள முடியாது.

---

11-ம் பாசுரம்

அறிவரிய பிரானையாழி
யங்கையனையே யலற்றி
நறியநன்மலர் நாடிநன்குரு
கூர்ச்சடகோபன் சொன்ன
குறிகொளாயிரத் துள்ளிவைபத்துந்
திருக்குறுங்குடி யதன்மேல்
அறியக்கற்று வல்லார்வைட்டிணவ
ராழ்கடல்ஞாலத் துள்ளே.

பதக்குறிப்புக்கள்:—நறிய நாள் மலர் நாடி-வாசனையுடைய புதிய மலர்களைப் பூஜைக்குக் கொணர்ந்து சேர்ப்பதுபோல், மேன்மேலும் இன்சுவை பொருந்திய பாக்களால் பகவானுக்குத் தொடுத்த இந்தத்திருவாய்மொழி. அறியக் கற்று வல்லார் - சுவரஸமாய் முழுதும் அநுபவித்து மன்னஞ்செய்து சிந்தையில் வைத்து ஆசைப்படுபவர். வைட்டிணவர்—இப்பொழுது முதலே வைஷ்ணவர் ஆகிவிட்டார், இனிவேறு பயன் அவர்களுக்கு வாய்க்க அவசியமில்லை.

7-வது பாசுரத்தில் பிராட்டி எடுத்துக் கூறிய ஆழியங்கையனுடைய திவ்விய ஸௌந்தரியத்தையே இப்பாசுரம் மீண்டும் எடுத்துக் கூறுவது அறியத்தக்கது.

திருக்குறுங்குடிநம்பி—தன்னை விச்லேஷித்திருந்த சமயத்திலும் தம் ஆச்ரிதருக்குத் தன்னை மறக்கவொண்ணாதபடி பிரகாசியா நிற்கின்றானென்று இத்தசகத்தில் ஆழ்வார் பிரதிபாதித்தருளினர்.

# தமிழ்ப் பாடம் 79.

## அஷ்ட பிரபந்தம்—திருவேங்கடமாலை

[542-வது பக்கத் தொடர்ச்சி]

திங்களிறு மாந்துலவத் தீம்பாற் கவளமென்று
வெங்களிறு கைநீட்டும் வேங்கடமே—பொங்கமரி
லார்த்த வலம்புரியா ராட்பட்டார் செய்தபிழை
பார்த்த வலம்புரியார் பற்று. 8

பதப்பிரிவு:—திங்கள் இறுமாந்து உலவ தீம் பால் கவளம் என்று வெம் களிறு கை நீட்டும் வேங்கடமே பொங்கு அமரில் ஆர்த்த வலம்புரியார் ஆள்பட்டார் செய்த பிழை பார்த்து அவலம் புரியார் பற்று.

பதவுரை:—திங்கள் - சந்திரனானது, இறுமாந்து - செருக்குடன், உலவ-(ஆகாயத்தில்) திரிய, (அதனை) வெம் - கொடிய, களிறு-யானையானது, தீம்-இனிய, பால் கவளம் - பால்சோற்றின் கவளம், என்று - என்று எண்ணி, (பற்றி உண்பதற்கு) கை - தனது துதிக்கையை, நீட்டும் - நீட்டுகின்ற, வேங்கடமே - வேங்கடமாலைதான்,

பொங்கு - மிகுகின்ற, அமரில் - பாரதப் போரில், ஆர்த்த - சப்தித்த, வலம்புரியார் - வலம்புரிச்சங்கையுடையவரும்,

ஆள்பட்டார் - (பக்தியினால் தனக்கு) ஆளானவர்கள், செய்த-செய்த, பிழை - குற்றங்களை, பார்த்து-கவனித்து, (அவர்களுக்கு) அவலம்-துன்பத்தை, புரியார் - செய்யாதவருமான திருமால்,

பற்று - சேர்ந்திருக்கும் மலை.

விரிவுரை:—இத் தூரத்தில் இருக்கின்ற தனக்கு ஏது பயம் என்று எண்ணி ஆகாயத்தில் சஞ்சரித்த சந்திரன் திருவேங்கட மலையருகு வந்தவுடன் அம்மலையிலிருந்த யானை அதனைப் பிடிப்பதற்குக் கையை நீட்டலாயிற்று. எட்டிப் பிடித்துவிடலாம் இச்சந்திரனை என்று யானை எண்ணியதிலிருந்து அம்மலையின் உயர்ச்சி தெரியவருகின்றது. மலையின்மேல் இருந்த யானைக்கும் ஆகாயத்தில் இருந்த சந்திரனுக்கும் உண்மையில் ஒருவித தொடர்பும் இல்லாதிருந்தும், கவி தன்னுடைய சாமர்த்தியத்தினால் இந்த யானை அந்தச் சந்திரனைப் பிடிக்கக் கை நீட்டியதென்று ஓர் தொடர்பு கற்பித்து, அதன் மூலமாய் அம்மலையின் உயரத்தைப் பெரிதும் பாராட்டுவதால் இது தொடர்புயர்வு நவிற்சி யணி.

இதனில் மயக்க அணியுங் கலந்திருக்கின்றது. ஒரு பொருளை வேறொரு பொருளென எண்ணி விவகரிப்பது இவ்வணிக்கு இலக்கணம். "மங்கையொருத்தி மலர்கொய்வாள்......" என்று தொடங்குகின்ற நளவெண்பாச் செய்யுளும், "பொன்னுடைய வாசப் பொருட்டு..." என்ற செய்யுளும் இவ்வணிக்கு நல்ல உதாரணங்கள். இதனை முன் (வால்யூம்5 பக்கம் 545) விளக்கிக் காட்டியிருக்கின்றோம். இவ்விடத்தில் யானையானது சந்திரனைப் பார்த்துப் பாற்கவளம் என்று



மயங்கி, அதனைப்பிடித்து உண்பதற்குக் கைநீட்டியது என்று சொல்லும் இது மயக்க அணியாம். இம் மயக்கத்தை முன்னிட்டு அவ் வுயர்வுநவிற்சியும் ஏற்படலாயிற்று. மயக்க அணியை வடமொழியில் பிராந்திமதாலங்காரம் என்பர்.

திருமால் தன்னுடைய அடியார்கள்மேல் வைக்கின்ற அன்பின்மிகுதியால் அவ்வடியார்பிழையிழைத்தாலும் பராமுகமாகவே இருப்பானேயன்றி அதைப் பார்த்துத் தண்டிக்கமாட்டான் என்பது இங்குக் கூறப்பட்டிருக்கின்றது. "உன் அடியார் இப்பிழை செய்தார் காண்" என்று யாரேனும் வந்து கோள்கூறினும், அக்கருணையங் கடவுள் "என் அடியார் அது செய்யார். செய்தாராயினும் அது நல்லதாகவே இருக்கும்" என்றுரைப்பானென அவன் நற்குணக் கடலில் ஆடியுள்ள பெரியோர் கூறியிருக்கின்றனர்.

குறிப்பு:—இச் செய்யுளில், உலவ + தீம் என்னும் சொற்கள் தொடர்கையில் நிலைமொழி இறுதியிலும் வருமொழி முதலிலும் உள்ள எழுத்துக்கள் புணரும் போது த் என்னும் ஓர் எழுத்துத் தோன்றியதால் இப்புணர்ச்சி விகாரப்புணர்ச்சியாகும். அது பெற்ற விகாரம் தோன்றல் விகாரம்.

பால் + கவளம், என்று புணர்கையில், நிலைமொழியிறுதியிலுள்ள ல் என்னும் எழுத்து ற் என்னும் எழுத்தாகத்திரிந்தது, திரிதல்விகாரம். வெம் + களிறு வெங்களிறு, என, மகரமெய் ஙகரமெய்யாகத் திரிந்ததும் திரிதல்விகாரம்.

---

வன்குறிஞ்சி மாதர்போல் வானோர் மருந்துக்கு
மென்குறிஞ்சித் தேன்மாறும் வேங்கடமே—நன்
[குறிஞ்சிப்
பேய்த்தநஞ்சு வைத்தார் பிறர்க்கமுதீந் தீசனுக்கு
வாய்த்தநஞ்சு வைத்தார் வரை. 9

பதப்பிரிவு:—வல் குறிஞ்சி மாதர்பால் வானோர் மருந்துக்கு மெல் குறிஞ்சி தேன் மாறும் வேங்கடமே நன்கு உறிஞ்சி பேய் தநம் சுவைத்தார் பிறர்க்கு அமுது ஈந்து ஈசனுக்கு வாய்த்த நஞ்சு வைத்தார் வரை.

பதவுரை:—வல் - வலிய, குறிஞ்சி - குறிஞ்சிநிலத்தில் வாழ்கின்ற, மாதர்பால்-குறப்பெண்களிடத்தில், வானோர் - தேவர்கள், மருந்துக்கு-அமிர்தத்திற்குப் பதிலாக, மெல்-மெல்லிய, குறிஞ்சி - குறிஞ்சியில் கட்டிய, தேன் - தேனை, மாறும் - பண்டமாற்றாகப் பெற்றுக்கொள்ளும், வேங்கடமே - வேங்கடமலைதான், நன்கு - நன்றாக, உறிஞ்சி - உயிரையுங்கூட உறிஞ்சி, பேய் - பேயாகிய பூதகியினுடைய, தனம் - முலைகளை, சுவைத்தார்-சுவைத்தவரும்,

(பாற்கடல் கடைந்து) பிறர்க்கு - மற்றவர்களுக்கு அமுது - அமிர்தத்தை, ஈந்து-கொடுத்து, ஈசனுக்கு-பரமசிவனுக்கு, வாய்த்த-கிடைத்த, நஞ்சு-விஷத்தை, வைத்தார் - வைத்தவருமாகிய திருமாலினது,

வரை - மலையாகும்.

விரிவுரை:—முன் செய்யுளில், தான் புனைந்துரைத்த உயர்வு நவிற்சிக்கு உதவியாக, யானை சந்திரனைப் பார்த்துத் தீம்பால் கவளம்என்று மயங்கியதென ஒரு மயக்கஅணியையும் கவி அதனுள் அடக்கிக்கொண்டார். அவ்வாறே இந்தச் செய்யுளிலும் பரிவருத்தனையணி என்னும் ஓர் அணி அடங்கியிருக்கின்றது. ஒன்றைக் கொடுத்து அதற்குப் பதிலாக வேறொன் ... வதை அழகுறக் காட்டுவது இவ்வணியின் தன்மை. வீரர் போர்க்களத்தில் நிலையிலாத் தம் உயிரைக்கொடுத்து நிலைபெற்ற புகழை அடைந்தார் என்பதும், அழிகின்ற செல்வத்தை அளித்து அழியாப்புகழடைந்தவர் வள்ளலார் என்பதும், பரிவருத்தனை அணியே. இங்கு, வானவர் தாம் அருந்தும் அமிர்தத்தைக் கொடுத்து, வேங்கடமலையில் வாழும் குறத்தியரிடமிருந்து, அம்மலையின் தேனை விரும்பி வாங்கிக் கொண்டனர்என்றதால், இதுவும் பரிவருத்தனை அணியாயிற்று. இந்தப் பரிவருத்தனையை முன்னிட்டுத் தேவர் அமிர்தத்திற்கும், மலைத்தேனுக்கும் ஒருதொடர்பு கற்பித்திருக்கின்றதால் தொடர்பு உயர்வுநவிற்சி அணியும் முன்னிரண்டடிகள் பெற்றிருக்கின்றன. பரிவருத்தனை என்பது வடசொல். இதனைத் தமிழில் பரிமாற்றணி, மாறூட்டணி, மாற்றுநிலையணி என்னும் பெயர்களால் வழங்குவார்.

குறிப்பு:—குறிஞ்சி + தேன் = குறிஞ்சி த் தேன், என்று ஆனதும், பேய் + தனம் = பேய்த்தனம் என்றானதும், உறிஞ்சி + பேய் = உறிஞ்சி ப் பேய் என்று ஆனதும் தோன்றல் விகாரங்கள்.

---

### இலக்கணம்.

ஒலியின் அடையாளமான எழுத்துக்கள் மொழிகளின் கடையிலும் முதலிலும் நின்று புணரும்போது, தோன்றல் திரிதல் கெடுதல் என்னும் விகாரங்கள் அடையுமாயின் அப் புணர்ச்சியை விகாரப்புணர்ச்சி என்பர். இவ்வித விகாரங்கள் ஒன்றும் அடையாமல் அவ் வெழுத்துக்கள் அதது இருக்கும்படியே இயல்பாக இருக்குமாயின் அந்தப் புணர்ச்சி இயல்புப் புணர்ச்சி. அவன் வந்தான், கண் பெரிது, செய்துபோனான், என்பனபோல் இருபதங்கள் தொடரும்போது எவ்வித விகாரமும் பெறுமால், நிலைமொழி வருமொழி ஆகிய இரண்டு மொழிகளிலும் உள்ள எழுத்துக்கள் எல்லாம் அப்படியே இயல்பாக நிற்கின்றன. கல் + சட்டி, முள் + செடி, பொன் + குடம் என்பன, சேரும்போது கற்சட்டி, முட்செடி, பொற்குடம், என ல், ள், ன் என்ற எழுத்துக்கள், ற் ட் ற் எனத் திரிந்தன. நிலம் + வரி, தேன் + மொழி என்பன புணரும்போது, நிலவரி என்றும், தேமொழி என்றும், இறுதியிலுள்ள ம் ன் என்னும் எழுத்துக்கள் கெட்டன. தலை + பாகை, குதிரை + கால் என்பன, தலைப்பாகை, குதிரைக்கால் என்று புணரும்போது ப், க் என்னும் எழுத்துக்கள் தோன்றின.

இவ்வாறு, இயல்பாயிருப்பது எப்பொழுதென்றும், தோன்றுவது எப்பொழுதென்றும், திரிவது எப்பொழுதென்றும், கெடுதல் எப்பொழுதென்றும் தெரிந்துகொள்வதற்கு விதிகள் இருக்கின்றன. அவைகளைப்பற்றிக் கூறும் விதிகள்தான் புணரிலக்கணம். மண் + கலம் என்று சேரும்போது, ணகரமெய் டகரமெய்யாகத் திரிந்து மட்கலம் என ஆகும். ஆனால், மண் + கரிது, எனச் சேருமானால் மண்கரிது, என இயல்பாகவே யிருக்கும். முன், மண் + கலம், என்றபோதும் நிலைமொழியின் இறுதியில் ணகரமெய்யும், வருமொழிமுதலில் ககரமும் இருந்தன. பின் மண் + கரிது, என்றதிலும் அப்படியே. ஆயினும் அங்குத் திரிதல்விகாரம் வந்தது, இங்கு வரவில்லை. ஆகையால் எழுத்துக்களை மாத்திரம் பார்த்தால் போதாது. அர்த்தத்தையும் பார்க்கவேண்டும். அதாவது நிலைமொழியும் வருமொழியும் என்ன பொருளில்

தொடர்கின்றன என்று தொடரிலக்கணத்தை நினைவிற் கொண்டுதான் புணர்வது இப்படி என்று சொல்லக்கூடும். மட்குடம் என்றது மூன்றும்வேற்றுமை உருபும்பயனும் உடன் தொக்கதொகை; ஆகையால் ணகரம் டகரமாகத் திரிந்தது. மண்+கரிது என்பது எழுவாய்த்தொடர், ஆகையால் திரியவில்லை. அப்படியே, நாய்+கால், என ஆறும்வேற்றுமைத்தொகையாயின் நாய்க்கால், எனக் ககரமெய் தோன்றியும், நாய்+கடித்தது என எழுவாய்த்தொடராயின் நாய் கடித்ததுஎனக்ககரம்தோன்றாமல்இயல்பாயும்வரும்.

நிலைமொழி யிறுதியையும் வருமொழி முதலையும் நோக்கிப் புணரிலக்கணத்தை நான்கு வகைகளாகப் பிரித்துக்கொண்டு கற்க ஆரம்பிக்கலாம்.

i. நிலைமொழி யிறுதியில் மெய்யெழுத்தும், வருமொழி முதலில் உயிரெழுத்துமாக வருவது.

சிறுவன்+அழுதான்; பேய்+ஓடியது; பெண்+எங்கே, தேர்+இழுத்தான்; முதலிய உதாரணங்களில், நிலைமொழியின் இறுதியில் உள்ள எழுத்துக்கள் ன் ய் ண் ர் என்னும் மெய்யெழுத்துக்களாகவும், வருமொழி முதலில் உள்ள எழுக்துக்கள் அ ஓ எ இ என்னும் உயிரெழுத்துக்களாகவும் இருக்கின்றன. இது ஒரு வகை.

ii. நிலைமொழி யிருதியில் உயிர் எழுத்தும், வருமொழி முதலிலும் உயிரெழுத்துமாக வருவது.

அது+அழகு, காணு+ஓடினான், கூசி+எழுந்தான், படிக்க+இருந்தான்.

இவ்வுதாரணங்களில், நிலைமொழி இறுதியில் இருக்கின்ற எழுத்துக்கள் உயிர் எழுத்துக்கள். மெய் எழுத்துக்கள் மொழிக்கு முதலில் வாராததுபோலவே உயிரெழுத்துக்கள் இறுதியில் வரா. அவை உயிர் மெய்யெழுத்துக்களே. ஆனாலும், து, என்பது த்+உ என்று மெய்யும்உயிரும் சேர்ந்து ஆகும்போது, கடைசியில் ஒலிப்பது உ என்னும் உயிரெழுத்துத்தான். காணு என்பதிலும் அப்படியே காண்+ஆ, என, ஆ என்னும் உயிரெழுத்தே இறுதியில் ஒலிக்கின்றது. ஆகையாற்றான் இவ்வுதாரணங்களில் உயிர் ஈற்றில் வந்திருக்கின்றதென்று சொல்கிறோம்—இது இரண்டாவது வகை.

iii. நிலைமொழி இறுதியில் உயிரெழுத்தும் வருமொழிமுதலில் மெய்யெழுத்தும் வருவது

அது+பெரிது, காணு+கண், படிக்க+புத்தகம், வேங்கை+கொன்றது போன்ற உதாரணங்களில், நிலைமொழியிறுதி வருமொழிமுதல்இரண்டும் உயிர்மெய் எழுத்துக்களா யிருந்தபோதிலும், முன் சொல்லியபடி, நிலைமொழியிறுதியில் உயிரெழுத்தொலியும்வருமொழி முதலில் மெய்யெழுத்தொலியுமே வருவதை உச்சரித்துப் பார்த்து உணர்ந்துகொள்ளவேண்டும். காண் ஆ+க்அண்—இது மூன்றாவது வகை.

iv. நிலைமொழி யிறுதியில் மெய்யெழுத்தும் வருமொழி முதலிலும் மெய்யெழுத்துமாக வருவது.

சிறுவன்+சிறித்தான், பேய்+கூத்து. பெண்+வந்தாள், தேர்+தட்டு; போன்ற உதாரணங்களில், நிலைமொழி இறுதி வருமொழி முதல், ஆகிய இரண்டிடத்திலும் மெய்யெழுத்துகளே வந்திருக்கின்றன. சிரித்தான், கூத்து, வந்தாள், தட்டு ஆகிய வருமொழிகளின் முதலில், சி, கூ, வ, த என்னும் உயிர்மெய் எழுத்துக்கள் அல்லவோ வந்திருக்கின்றன; அப்படியிருக்க மெய்யெழுத்து என்று ஏன் சொல்கின்றோம் என்று சந்தேகப்படலாம். க், ங் ச் ஞ் போன்ற மெய்யெழுத்துக்கள் பதினெட்டில் ஒன்றாமே மொழிக்கு முதலில்வாராது. அவைகள் மொழிக்கு முதலில் வருவதானால் உயிரோடு சேர்ந்து க கா, கி கீ, ச சா, சி சீ, என உயிர்மெய்யெழுத்துக்களாகவேவரும். ஆனால் க்+அ=க என்று ஆன உயிர்மெய் எழுத்தை உயிரும் மெய்யுமாகப் பிரித்தால் முதலிலிருப்பது க் என்னும் மெய்யெழுத்துத்தானே. ஆகையால் காடிஎன்றுசொல்லும்போது அச்சொல் க என்னும் உயிர்மெய்யெழுத்தை முதலாக உடையதானாலும் க் என்னும் மெய்யெழுத்தின் சப்தந்தான் முதலில் ஒலிக்கின்றது. ஆகையால் அதனை, மெய்யை முதலாக உடைய சொல் என்றே சொல்லவேண்டும். உயிரெழுத்தின் ஒலியாகிய அ, என்பதை முதல்வைத்துப் பின் க் என்ற ஒலியைச் சேர்த்தால் க என்று ஆகாது, அக் என்றே ஆகும். க், என்னும் ஒலியை முதலிற் சொல்லி அப்புறம் அ என்னும் ஒலியைத் தொடரச் சேர்த்தால்தான், க, என்று ஆகும். எனவே, சிறுவன்+சிரித்தான், என்னும் உதாரணத்தில், (சிறுவன்+ச்+இ ரித்தான்), ச், எனும்மெய்யெழுத்தே வருமொழி முதலில் இருப்பதாகப் புணரிலக்கணத்தின் பொருட்டுக் கொள்ளவேண்டும். அப்படியே, பேய்+க்+ஊத்து, என இவ்வுதாரணத்திலும் க், வருமொழி முதலில் உளது—இது நான்காவது வகை.

இவ்விதம் நிலைமொழி யிறுதியையும் வருமொழி முதலையும் நோக்கி நான்குவிதமாக அமைகின்ற புணர்ச்சியின் இலக்கணத்தை இனிக் கற்போம். அவைகளில், அரசன்+ஆண்டான், கள்+ஒழுகும், மேல்+எழுந்தான், என்பனபோல, நிலைமொழியிறுதியில் மெய்யெழுத்தும் வருமொழி முதலில் உயிரெழுத்தும் வருகின்ற புணர்ச்சியின் இலக்கணம் வெகு சுலபம். அவ்வாறே, எண்ணி+இருந்தான், தீ+அவிந்தது, வந்த+அரசன், தந்தை+உவந்தான், அது+எங்கே, என்பனபோல், நிலைமொழி இறுதி வருமொழி முதல் ஆகிய ஈரிடத்தும் உயிரே வரப் புணர்கின்ற இலக்கணமும் சுலபமே. மற்று, நிலைமொழியிறுதியில் உயிரும் வருமொழி முதலில் மெய்யும் வருகின்ற புணர்ச்சியும், அல்லது நிலைமொழி வருமொழி ஆகிய ஈரிடத்தும் மெய்யெழுத்தே வருகின்ற புணர்ச்சியும் தெரிந்து கொள்வதற்கு ஓரளவு முயற்சியும் பொறுமையும் வேண்டும்.

இதன்முன் கற்றிருக்கின்ற சொல்லிலக்கணமும் தொடரிலக்கணமும் மறவாமல் இருக்கும்படி செய்துகொள்ளவும்.

# அமீல்

[546-வது பக்கத் தொடர்ச்சி]

1821ம் வருடம் செப்டம்பர்மாதத்தில், ஹென்றி பிரெடெரிக் அமீல் (Henri Frederic Amiel) என்றவர், ஜினிவா என்னும் நகரத்தில் (Geneva), பிறந்தவர். இவருடைய பன்னிரண்டாம் பிராயத்தில், இவருடைய பெற்றோர்கள் இறந்துவிட்டமையால், இவரும் இவருடைய சகோதரிகளிருவரும் இதரஉறவினர்களால் ஆதரிக்கப்பட்டுவந்தனர்.

1844-1848 ம் ஆண்டுகளில், ஐரோப்பாவிலுள்ள பிரதான நகரங்களுக்குச் சென்று, ஆங்காங்குள்ள வித்வான்கள் ராஜ்யதந்திரிகள் முதலிய மற்றுமுள்ளவர்களைச் சேர்ந்து பழகியதுடன், இவர் கணக்கற்ற



வித்தக நூல்களையும் காவியங்களையும், சரிதங்களையும் கசடறக் கற்றும், அகவாராய்ச்சியிற் புகுந்து விசாரித்தும் வந்தனராம்.

பிறவியிலிருந்தே தோன்றிய ஏகாந்த விருப்பமும் உள்ளாராய்ச்சி செய்தறியுங் குணமும் நாளுக்குநாள் இவர்பால் வளர்ந்துவந்தனவாம். ஜெர்மனியிலிருந்த பொழுது, அகண்டமும் அகாதமுமான பிரபஞ்சத்தின் அமைப்பையும், உலகாதிகளின் உள்ளப்போக்கையும் முடிபையும் அறிந்து, நானாவிதக் கலைகளில் நிபுணத்வம் அடைந்து, ஐயந்திரிபுக ளற்ற ஞானம் பெற்று உயர்தலே வாழ்க்கைப்பயன் என்றதை இவர் அறிந்தனராம்.

1849-ம் வருடத்தில், ஜினீவாவிலுள்ள கலாசாலையில் போதகாசிரியராக நியமிக்கப்பட்டனர்.

எனினும், தன்னுடைய விவேகத்தையும் ஞானத்தையும் அநுபவப் பலன்களையும் உட்கருத்துக்களையும் மனப்பூர்வமாகப் பற்றித் தட்டுத்தடைகள் இல்லாமல் தொடர்ந்து முறைபிறழாமல் ஒழுகுதற்கான சந்தர்ப்பம் இல்லாமையால், இயல்பாக விளங்கிய இவருடைய மனோவியாகுலமும் புழுக்கமும் அயிர்ப்பும் பெருகி வந்தனவாம். ஆயினும், இடையிடையே, சிந்தனையுலகில் மனதைச் செலுத்திநிறுத்தி ஒருவாறு ஆறுதலடைவாராம்.

"என் உணர்ச்சிகளையும் கருத்துக்களையும் தெளிவாக வெளிப்படுத்துவதற்கு ஏற்றசொற்களையும் வழியையும் அறியாமல்தவிக்கின்றேன். புலன்கள் அடங்கி மனம் ஒருமுகப்பட்டு நிற்கையில், இருதயத் துடிப்பையும் வாணாள் அவமே கழிவதையும் உணர்கின்றேன். காலம் என்னும் ஆற்றின் கரையில், யான் ஒரு சிலையாக மாறிநின்று, ஏதோ ஒரு அரும்பெரும் இரகசியம்வாய்ந்த விநோதக்காட்சியை உற்றுப் பார்த்துக் கொண்டிருப்பதாகத் தோன்றிற்று."—இன்னமும், "வாழ்க்கை எனப்படும் சுழற்காற்றில், துரும்புகளான ஜீவன்கள் இடுக்கண்ணுற்று அலமந்து வாடி மடிவதையும், ஓய்வுஒழிவுகளில்லாத சம்பவங்களையும், திகைக்கச்செய்யும் மாறுதல்களையும், வென்று அடக்கக்கூடாத வாழ்க்கைப் போக்குக்களையும் காண்கின்றேன். அகத்தில் ஊன்றி நின்று, பகிர்முக ஆராய்ச்சியில் தோய்ந்து சுற்றிப் பார்க்கையில், அசலநித்யத்வமாகிய சமுத்திரத்தில் காலமானது கடுவிசையுடனும் பேரொலியுடனும் நுரைத்து ஓடிப் புகுதலைப் பார்க்கின்றேன்."—இன்னமும், "அற்ப விஷயங்கள்பலவற்றில் தலையிட்டு, இழிந்த ஆரவாரங்களில் பிரவிர்த்துத் திளைத்து, அநித்ய சுகபோகங்களுக்கு அடிமையாகிக் கலங்கி வருந்துவதற்கிடையில், விரிவும் ஒடுக்கமும் போக்கும் வரவும் ஏற்றமும் இறக்கமும் உருவமும் அற்றதும், உளது இலது எனக் கூறுதற்கியலாததும், சர்வமும் மறைந்துபோனபின்னரும் தான் மாத்திரம் நிலைத்துநிற்பதும் ஆன அந்தரான்மா தங்கும் அகாத அகழியும் நிசப்தக் குகையுமாகிய அகத்துள் மனதை மீட்டுமீட்டும் செலுத்திவருகின்றேன்." என்றென்று எடுத்துக் கூறுவார் இவர். இம்மேற்கோட்களினின்று இவருடைய மனோநிலையை நாம் ஒருவாறு அறியலாம்.

இப்போராட்டங்களுடன், இவரை இளமைமுதற்கொண்டு துன்புறுத்திய சரீரவேதனைகளும், மேற்காட்டியபடி தன் கருத்துக்களைப் பரிபூரணமாகப் பற்றியொழுகற்கு வேண்டிய வசதிகளில்லாமையும், தன்னுடைய மனப்பாங்கையும் போக்கையும் ஞானவளப்பத்தையும் உணர்ந்து, அன்புடன் பழகி ஆதரிக்கக்கூடிய நண்பர்கள் வாய்க்காமையும் கலந்து, இவருடைய ஜீவஜோதியை மழுக்கினதுமன்றி அவித்தனவே போலும்! உயரிய குணமும், தூயவொழுக்கங்களும் இனிய செயற்களும் கூடப்பெற்ற பேரான்மாக்களின் வாணாட்களில் பரிதபிக்கத் தக்கதான இவ்விஷயங்களும் நிகழ்ச்சிகளும் பெரும்பான்மை காணப்படுகின்றன.

"மிக்க உயரிய சாதனங்களையே பெற்று அநுபவிக்க ஆர்வமுடையேன். பருப்பொருள்களும் ஸ்தூல வாழ்க்கையும் புலன் இச்சைகளும் என்னுள் வெறுப்பை விளைவிக்கின்றன. சிந்தனாவுலகில் படிந்து, சிந்தனைகளையே பற்றித் தொடர்ந்து இனித்திருக்கும் ஒருநாளை யான் எதிர்பார்க்கின்றேன். என் ஆயுளுக்குள் அந்நாள் உதிக்கப்போவதாகத் தோன்றவில்லை!" இன்னமும், "லௌகீகவாழ்க்கையும், திருத்திஇணைத்து நிறுத்தற்கு இயலாத குணமாறுபாடுகளும், அயலார் போக்கையே அநுசரித்து வாழ்தலும், அச்ச உணர்ச்சியைஎன்னுள்கிளர்த்துகின்றன. மிக்க கற்பனா சக்தியும் நுண்ணிய ஆராய்ச்சியும் என்னுள் நிறைந்திருந்தபோதிலும், அவைகளைத் தக்க வழிகளில் உபயோகப்படுத்தி மேலெழுதற்கு வேண்டிய திடமான குணமில்லாமையால் தவிக்கின்றேன். மேன்மேல்விசாரிக்குமளவில், உட்சக்தியின்மீதும், வாழ்க்கை இன்பத்தின்மீதும் எனக்கு அவநம்பிக்கை உண்டாகின்றது."—"அரையுங் குறையுமான விஷயாதிகளையும் அதிருப்தியை விளைக்கும் உடைமைகளையும், என் துல்லிய கற்பனைகளின் காரணத்தால், துறந்துவருகின்றேன்."—"நிஷ்பிரயோஜன அநுதாபமும் நெட்டுயிர்த்தலும் அவலமென ஒதுக்கிவருகின்றேன்."

இன்னமும்,—"நிர்மல மனத்துடன் உலகாதிகளின் தன்மையைக் கற்று அறிந்து உணர்ந்து, ஸ்வப்பனவுலகில், தாராளமாய் உலவுதலே எனக்குச் சாத்தியமான கர்மம்போலும்."—"செயல்களிற் புகுந்து அலப்புறாமல் உலகாதிகளின் போக்கையும், வாழ்க்கை ஊர்கோலத்தையும் கண்டு களித்தலே எனக்கான ஆதர்சம்போலும்"—"விஷயங்கள் அறிவே சிறந்தது; அவ்வறிவை எவ்விதத்திலாயினும் உருவகப்படுத்தி வெளியிடல் இழியதாகும்."—"ஏகாக்ர சித்தம், அல்லது இச்சாசக்தி; அல்லது ஒருமித்தகுணந்தான் என்னிடமில்லை; என் சோகத்திற்கும், சோம்பலுக்கும், தோல்விக்கும் அதுவே காரணமாவது போலும்."

இன்னமும்,—"அளப்பரிய அரும்பெருங் காரியங்களை யான் ஏற்றுச் செய்திருக்கக்கூடுமென என்நண்பர்கள் கருதுகின்றனர்; ஆயினும், என் சுபாவத்தை உள்ளவாறு யான் ஒருவனே அறிகின்றேன்.

இன்னும்—"மாந்தர்க்கு முக்கியமான உயரிய சாதனம் யாதெனின், கடவுளின் அருள்பெற்று உயர்தலேயாம்."—"புலன்களின் ஆர்பாட்டங்களும் மனப்போக்குக்களும் ஆன்மசக்தியை உணர்ந்து, இறைவனது வல்லமையையும் கருணையையும் அறிந்து உய்வதற்கான வழிகள் போலும்."—"மதம் என்பது ஓர் கேவல ஏட்டுச்சுரைக்காயன்று, வாசா கைங்கரியமும் அன்று; மற்று, புனித வாழ்க்கையாகும் அது. அகாத்தினின்று முனைந்து, [illegible]

னும், யாவரும்பார்த்துச் சுவையுடன்புசித்து இனித்து ஆறுதலடைதற்கான பலன், அல்லது பழத்தை அளிப்பதாகும்."—"ஆசாபாசங்கள் மழுங்கிக் கீழடைகின்றன; ஆனால், ஜீவான்மாவானது கடவுளை நோக்கி உயர்ந்து செல்வதாகும்."—"ஒருவனும் ஏகாங்கியல்லன்; உள்ளாராய்ச்சியிற் புகுந்து விசாரிக்கையில், இறைவன் தோன்றி, நம்முடன் உரையாடி, நம்மை ஆனந்திக்கச் செய்கின்றான்; அவதிப்படுகையில், கொடுத்து உதவி நிமிர்த்துகின்றான்."

மதவகுப்புக்களையும் ஆசாரங்களையும் வெறுத்தவரல்லர் அமீல். "உருவங்களும் உடைகளும் அவ்வப்போது பலவாக மாறித்தோன்றலாம்; எனினும் என்றும் நிலைத்துள்ள மூலப்பொருள், அல்லது சத்வம் ஒன்றேயன்றோ?"

ஐம்பத்து மூன்றாம் வயதில், இவருடைய ஆன்மா பூதவுடலைக் கழற்றி எறிந்து அகன்றது.

# கலித்தொகை

[542-வது பக்கத் தொடர்ச்சி]

## பாலைக்கலி 18

*தலைவன், தலைவியைத் தான் விட்டுப் பிரியப்போவதாகத் தோழியிடத்துக் கூறினான். அதற்கவள் அச்செயல் தகுதி உடையதன்று என மறுத்தாள். எனினும் அவன் பிரிவிலேயே உள்ளமுடையவனாய் இருந்தான். ஆதலின் தோழி மனம் வருந்தி, "நீர் முன்னாள் எம்மைப் பாராட்டியவெல்லாம் பொய்யாய் இருத்தலை அப்பொழுது அறிந்திலேன். எமக்குப் பெரும்பழியை உண்டாக்கிப் பிரிய நினைக்கும் நீரும் மகனோ? நீர்பிரியின் தலைவி உயிருடன் இராள்" எனக் கூறி அவன் போக்கைத் தடுத்ததைக் கூறுவது இச்செய்யுள்.*

*செவ்விய தீவிய சொல்லி யவற்றொடு*
*பைய முயங்கிய வஞ்ஞான் றவையெல்லாம்*
*பொய்யாதல் யான்யாங் கறிகோமற் றைய*
*வகனகர் கொள்ளா வலர்தலைத் தந்து*
*பகன்முனி வெஞ்சுர முள்ள லறிந்தேன்,*
*மகனல்லை மன்ற வினி!*

*செல்லினிச் சென்றுநீ செய்யும் வினைமுற்றி*
*யன்பற மாறியா முள்ளத் துறந்தவள்*
*பண்பு மறிதிரோ வென்று வருவாரை*
*யென்றிறம் யாதும் வினவல் வினவிற்*
*பகலின் விளங்குநின் செம்மல் சிதையத்*
*தவலருஞ் செய்வினை முற்றும லாண்டோ*
*ரவலம் படுதலு முண்டு!*

(வரி. 1-6) ஐய-தலைவனே, செவ்விய தீவிய சொல்லி-செம்மையான சொற்களையும் இனிமையான சொற்களையும் சொல்லி, அவற்றொடு - அச்சொற்களோடு கூட, பைய முயங்கிய - மெல்லத் தலைவியைத் தழுவிய, அஞ்ஞான்று - அந்த நாட்களில், அவை எல்லாம் - (கூறிய) அம்மொழிகளெல்லாம், பொய்யாதல் யான் யாங்கு அறிகோ - பொய்யாய் இருத்தலை யான் எங்ஙனம் அறிவேன்? அகல் நகர் - அகன்ற வீட்டில் உள்ளாரால், கொள்ளா அலர் - பொறுக்க முடியாத அலரை, தலைத்தந்து - எமக்குக் கொடுத்து, பகல் முனி வெஞ்சுரம்—சூரியன் காய்கின்ற கொடிய காட்டிற்கு, உள்ளல் இனி அறிந்தேன் - (நீ போக) நினைத்தலை இப்பொழுது அறிந்தேன்! மன்ற மகன் அல்லை-நீ நிச்சயமாக சிறந்த ஆண்மகன் அல்லை.

அலர் - பலர் அறிந்து தூற்றும் பழிச்சொல்

'மகனென்ப சிறந்தோன்' என்பது நிகண்டு.

(வரி. 7-13) இனி செல் - இப்போது நீ போவாய், சென்று நீ செய்யும் வினை முற்றி - நீ போய்ச் செய்ய விரும்பியதாகிய காரியத்தில் (ஊக்கம்) மிகுந்து (நின்று), அன்பு அற யாம் மாறி - அன்பு நீங்கும்படி யாம் (மனம்) வேறு பட்டு, உள்ள - எம்மை நினைத்து வருந்தும்படியாக, துறந்தவள் - எம்மாற் பிரியப்பட்டவளுடைய, பண்பும் அறிதிரோ என்று - செய்தியும் அறிவீரோ என்று, என்திறம் யாதும் வினவல்-என் வரலாறு எதையும் (இங்கிருந்து அங்கு வருவாரைக்) கேளாதே, வினவில் - கேட்பாயானால் (நான் இறந்துபோனேன் என்று அவர் உனக்குச் சொல்லலாம் ஆகலின்), பகலின் விளங்கு-சூரியனைப் போல் விளங்குகின்ற, நின் செம்மல் சிதைய - நினது தலைமையான ஆண்மை கெடும்படி, தவல் அருஞ் செய்வினை -கெடுதற்கு அரிய நீ செய்யத்தொடங்கிய காரியம், முற்றுமல் - முடியாமல், ஆண்டு ஓர் அவலம் படுதலும் உண்டு - அவ்விடத்தில் உனக்கு ஒரு வருத்தம் உண்டானாலும் உண்டாகலாம்.

பண்பும் என்பதிலுள்ள உம்மை எச்சவும்மை. அவலம் இழிவுபற்றியது. 'அவலம் படுதலும் உண்டு' என்றவிடத்து ஐய வும்மை வந்தது.


ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட் அவர்களின்




**டானிக்குகள் :**

| | |
|---|---|
| பாதாமி லேகியம் | ரூ. 3-0-0 |
| ரதிவல்லப லேகியம் | 2-0-0 |
| மஹா திராக்ஷாதி லேகியம் | 2-0-0 |
| **குழந்தைகளுக்கு** | |
| ஸ்ரீகர கஸ்தூரி மாத்திரை | 0-4-0 |
| பால சஞ்சீவினி | 0-4-0 |
| பால ஸுதா (டானிக்) | 1-0-0 |

**தைலங்கள் :**

| | |
|---|---|
| சந்தனாதி 6 அவுன்ஸ் | ரூ. 1-0-0 |
| அமிர்தாமலக ,, | 0-12-0 |
| பிருங்காமலக ,, | 0-12-0 |
| **ஸ்திரீகளுக்கு** | |
| ஸுதக டானிக் | 2-0-0 |
| கர்ப்பாசய டானிக் | 2-0-0 |
| ப்ரஸவ லேகியம் | 1-8-0 |

சுமார் 300 போலிகளை மாற்றும்.

"நஞ்சன்கூடு பல்பொடி" (ரிஜிஸ்தர் செய்துள்ளது)

சாதாரணம்-பாக்கெட் — சியவனப்ராசா — மிருங்காமலக தைலம் — கோரோஜனை மாத்திரை — I. D. L. டீ. மெடிகேட்டட் டப்பி

தயவுசெய்து கவனித்து வாங்கவும்.

சியவனப்ராச சிறந்த டானிக் சத்வைத்யசாலை - நஞ்சன்கூடு

தாஸ்டாலகல்

ஜவரேக்

[பஸ்பங்கள் வைத்தியர்களுக்கு மட்டும்.] [அட்வான்ஸுடன் ஆர்டர் செய்யவும்.]




# பொதிகை நிகண்டு

## (இரண்டாம் பகுதி)

[547-வது பக்கத் தொடர்ச்சி]

பி—வர்க்கம்.

60 பிங்கலை யாந்தையு மோர்காற்று மாகும்.
61 பிங்கலம் பொன்மையும் பொன்னு மாகும்.
62 பிச்சமாண் மயிரும் பீலிக் குடையும்
வெண்குடை யுமென விளம்பினர் புலவர்.
63 பிசிதம் நீரு மிறைச்சியும் வேம்பும்.
64 பிசியரும் பொருளும் பொய்யும் சோறும்.
65 பிசினன் பொய்யனுங் கோபனும் லோபனும்.
66 பிஞ்ஞகம் பூணையும் குராற் பசுவு மாகும்.
67 பிடகந் தந்திரமும் வேதமு மாகும்.
68 பிணைபெண் விலங்கும் பிணையல் மாலும்
ஆசையுந் தொடர்பு மறைந்தனர் புலவர்.
69 பிணியே நோயுங் கட்டு மாகும்.
70 பிண்டந் திரளையும் பிச்சையும் யாக்கையும்.
71 பிணாபெண் விலங்கும் பெண்ணு மாகும்.
72 பிண்டி யசோகும் நெல்லின் மாவும்
பிண்ணாக்குஞ் சோறு மோர்நாளு மாகும்.
73 பிணர் [1]சர்ச்சரையுங் கோங்கு மாகும்.
74 பிணிமுகம் புட்பொதுவு மன்னமு மயிலும்.
75 பிணவல் பெண்ணும் நாயும் பேசுவர்.
76 பித்திகை சுவர்த்தலமும் கருமுகையு மாகும்.
77 பிதிரே கதையு நொடித்தலுந் தூவலும்
பிதிருந் தெய்வமும் கிளையும் விகற்பமும்.
78 பிதாமும் மூர்த்தியு நாரையுந் தந்தையும்.
79 பித்தன் தோராலும் பித்தனு மாகும்.
80 பிப்பிலி யரசுந் திப்பிலியு மாகும்.
81 பிரம்பு நெய்யு மரிசியும் வேலையும்
தோட்டியும் பிரம்புஞ் சொல்ல லாகும்.
82 பிரசந் தேனுங் கள்ளுந் தேனீயும்
இறாலும் பிரமாமு மிசைத்தனர் புலவர்.
83 பிரம சாரியர் வேதியரும் பெருந்தவரும்.
84 பிரமம் மும்மூர்த்தி யும்பெரி யோரும்
வேதாந்தமும் வேள்வியு ஞானமும் வேதமும்
முத்தியுந் தருமமும் பூமியுந் தகரும்
மந்திர முஞ்சுடர் மூன்று மாகும்.
85 பிலவங்கங் குரங்குந் [2]தேரையு மாகும்.
86 பிள்ளை வயிரவனுங் காக்கையு மகனும்
இளமர முமென வியம்பினர் புலவர்.
87 பிளிறல் எழுத்திலா வோசையும் ஆர்ப்பும்.
88 பிறங்கல் வெற்பு மிறையு மிகுதியும்
நிறையும் பெருமையு முயர்பு மாகும்.
89 பிறங்கடை மைந்தனு மருகனு மாகும்.
90 பிறர்கை பாவமும் பவமு மாகும்.
91 பிறழ்த லொளிவிடலு நடுக்கமும் பெயர்தலும்.
92 பின் பின்றோன்றலும் பிற்றைப் பொழுதும்
தங்கையுந் திருவும் சாற்ற லாகும்.

பீ

93 பீடிகை தட்டும் பீடமுங் கடையும்.
94 பீதகஞ் சாந்தும் பொன்னும் பொன்மையும்
பிங்கல மும்மிரு வேலியும் பேசும்.
95 பீதம் பொன்னும் பொன்மையுஞ் சாந்தும்.
96 பீர்முலைப் பாலும் பீர்க்கு மச்சமும்
பச்சிலையும் பசலையும் பகர லாகும்.
97 பீருப் புருவமு மச்சமுள் ளோனும்.
98 பீரம்பூ வரசும் பீர்க்கும் வாகையும்.
99 பீலிசிறு சின்னமும் பொன்னும் வாச்சியமும்
கலாபமு மால வட்டமுஞ் சவளமும்
பெருவரை யுங்காற் பீலியு மயிலும்.
700 பீனம் பெருமையும் பாசியு மாகும்.

பு

701 புகை யோசனையுந் தூமமு மாகும்.
702 புகலடைக் கலமுங் குதிரு முடலும்
வென்றியுஞ் சொல்லும் விளம்ப லாகும்.
703 புகர்சுக் கிரனுங் குற்றமு மடிசிலும்
புகர்நிற மும்மெனப் புகன்றனர் புலவர்.
704 புகழே புகழும் புகழ்தலு மகத்தியும்
வ[ா]கையு மெனவே வழங்க லாகும்.
1705 புங்க முயர்ச்சியு மம்பு நற்றாசும்
அம்பின் குதையு மறைய லாகும்.
1706 புட்டங் காகமும் புடவையு நிறைவும்.
1707 புட்கரம் நீரு மாகாயமும் பொலிவும்
வாளுங் குருகுந் தீர்த்தமும் பதுமமும்
பாண்ட முகமும் யானைக்கைந் நுனியும்
உட்செறி தாளு முரைத்தனர் புலவர்.
1708 புணையே மூங்கிலுந் தெப்பமு மாகும்.
1709 புணர்ச்சி கலவியுஞ் சேர்தலு மாகும்.
1710 புணர்வு தோய்ந்திடலு மிசைப்பு மாகும்.
1711 புணரி கடலுந் திரையுங் கரையும்.
1712 புண்டரிகம் புற்றும் புலியுமோர் நோயும்
குடையுங் கவரியு மாயனும் பதுமமும்
ஒருதிக் கானையுங் கழுகுமோர் பூடும்
வண்டு மரியனையும் வாசவனு மாகும்.
1713 புதனே புதனும் புத்தியு மாகும்.
1714 புதவு கதவுமோர் புல்லு மாகும்.
1715 புத்தேள் புதுமையுந் தெய்வமு மாகும்.
1716 புதைதல கைத்தலமு மம்புக் கட்டுமாம்.
1717 புதைகணைக் கட்டும் புதுமையு மறைவும்
அம்பு மெனவே யறைந்தனர் புலவர்.
1718 புத்தன் மாலு மருகனும் புத்தனும்.
1719 புதலோர் புல்லும் புருவமும் பூடும்.
1720 புந்தி புதனு ஞானமு மாகும்.
1721 புயமே மொய்ம்பும் வலியு மாகும்.
1722 புரமே யுடலும் பரியு முன்னுமாம்.
1723 புரவலன் வள்ளலும் வேந்தனு மாகும்.
1724 புரையே இல்லமும் பழுதுங் குற்றமும்
துளையு முயர்வு முவமையு மாகும்.
1725 புரையோர் மேலோருங் கீழோரு மாகும்.
1726 புரிவு விரும்பலும் வேறுபடலுஞ் செயலும்.
1727 புரத்தல் வணங்கலுங் காத்தலுங் கொடுத்தலும்.
1728 புரியே விரும்பலுஞ் செய்தலும் புரமும்
சங்குங் கயிறுங் கட்டு மாகும்.
1729 புலிங்கம் அனற்பொறியும் சடகமு மாகும்.
1730 புலத்தல் புலத்தலும் பூத்தலு மாகும்.
1731 புலமே யிடமு நடுக்கமும் புந்தியும்
விளைநிலமுந் திக்கும் புலனுந் தனிமையும்.
1732 புலவே யென்பும் புலான்முடைப் பெயரும்.
1733 புல்லே புதலும் புணர்ச்சியும் புன்மையும்
புலியும் பனையு மனுடமும் வலியும்.
1734 புலி சிங்கராசியும் சிங்கமும் புலியும்
சாந்து மெனவே சாற்றினர் புலவர்.
1735 புலவர் கூத்தரு மறிஞரும் புதனும்
தேவருஞ் சளுக்கி வேந்தரும் புலவரும்
பாடுந ருந்துதிப் போரும் பொருநரும்.
1736 புலம்பு தனிமையு மொலியு ம[ச்]சமும்
புலம்பலு மெனவே புகன்றனர் புலவர்.
1737 புவன முலகமு நீரு மாகும்.
1738 புழைக்கை யாளியும் யானையுந் தோலும்.
1739 புள்ளுவன் வேடனும் களியும் வஞ்சனையும்.
1740 புளகங் கண்ணாடியுஞ் சோறு மயிர்பொடித்தலும்.
1741 புளித்தல் ஆம்பிரமுஞ் செறித்தலு மாகும்.
1742 புளிதித் திப்பும் புளியு மாகும்.
1743 புள்ளே வண்டும் விட்டமும் புள்ளும்.
1744 புள்ளி நண்டும் புள்ளியு மாகும்.
1745 புறம்பணை குறிஞ்சியு முல்லையு மாகும்.
1746 புறவங் குறிஞ்சியு முல்லைப் பதியும்
புறவமுங் கானு மு[ல்]லையு மாகும்.
1747 புறணி குறிஞ்சியு முல்லை நிலமும்
புறம்பு[ந்] தோலும் புகல லாகும்.
1748 புறமே யிடமு முதுகும் வீரமும்.
1749 புற்றே யெழுத்துந் தலையும் புற்றும்.
1750 புனிதன் சிவனுந் தூயோனு மாகும்.
1751 புனைவு வனைதலு மெழிலும் பொலிவும்
ஒப்பனை யுமென வுரைக்க லாகும்.
1752 புன்கண் நோயு மெலிவுந் துன்பமும்.

(பிரதி)—1. சற்கரையுங். 2. தேரியு.

KALANILAYAM
REG. NO. M. 2324.

# வர்த்தமானம்

### ஏகாந்தியாய்ச் சீவிக்கிறவர்.

பெரும் ஆழியாற் சூழப்பட்டதும், ஸ்காட்டிலாண்டிலிருந்து 100 மைல் தூரத்திலுள்ளதுமான மின்கலே என்னுந் தனித்தீவில் ஓர் தனி வாசியாய் ஓர் ஸ்காட்லாண்டு வாசியான ரஸல் எனும் விவசாயக்காரர் ஒருவர் நெடுங்காலமாய்ச் சஞ்சரித்து வருகின்றார். ஒரேயொரு சதுரமைல் விஸ்தாரமுடைய அத்தீவில் இவர் ஒருவரைத் தவிர வேறெவருங் கிடையாது. இவர் காசு பணம் உபயோகிப்பதில்லை. மனித வர்க்கத்தினர்களைக் கண்டுகொள்வது அருமையிலும் அருமை. உலக சமாசாரம் ஒன்றுமே இவருக் கெட்டுவதில்லை. யுத்தங்கள், கொள்ளை நோய்கள், பொதுத் தேர்தல்கள், அரசர்களின் மரணங்கள் நிகழ்ந்தாலும் இவர் ஒன்றையும் அறிகிறதில்லை. இவரொரு குற்றவாளியுமல்லர். பைத்தியக்காரனுமல்லர். தனக்குத் தேவையானதை யெல்லாம் அவர் அத்தீவில் தேடிக்கொள்ளுகின்றார். தனக்கு வேண்டிய உணவுப் பொருட்களைத் தானே விளைவித்தும், தனது உடைகளைத் தானாகவே செய்தும் கொள்ளுகின்றார். அங்குள்ள கடற் பறவைகள், மீன்கள், வெள்ளாடுகள், செம்மறியாடுகள் இவரின் தோழர்களாகும். பகலில் வேலை முடிந்ததும் தன்னிடமுள்ள வேதப் புத்தகத்தை எடுத்து வாசித்துக் கொள்ளுகின்றார். இவ்வாறாக இவர் உலகச் சீவியத்தை விட்டொழித்துத் தனிமையாகச் சீவிப்பதில் மனப்பாக்கியத்தைக் கண்டிருக்கின்றார். பிரித்தானியப் பொதுத் தேர்தலில் இவருக்கும் வாக்குரிமை உண்டெனினும் அவர் அதைப் பாராட்டுவதுமில்லை; எவரும் போய்க் கேட்பதுமில்லை.

---

சாமோ தீவைச்சேர்ந்த யுத்த வீரர்கள், தங்கள் முகத்தில், கத்தியால் பலவித கோடுகளைக் கிறிப் படம் வரைந்துகொள்ளுவது வழக்கமாம். இதனால் மிகுந்த வேதனை யேற்படுவதுடன், பல மாதங்கள் வரை படுத்த படுக்கையாக விருக்க வேண்டியும் வருவதை இவர்கள் ஒரு பொருட்டாகக் கருதுவதில்லை.

சென்ற 23 ஆண்டுகளாக லண்டனில் தூக்குப் போடும் உத்தியோகத்தைச் செய்து வந்த 68 வயது சென்ற ஜான் எல்லிஸ் என்பவனை யாரோ அவன் வீட்டில் கழுத்தை வெட்டிக் கொன்றுவிட்டார்கள். அவன் பல பெரிய மனிதர்கள் உள்பட 203 பேர்களைத் தூக்குப் போட்டிருக்கிறான்.

காங்கோ பிரதேசத்தில் ஓர் பல்லி போன்ற ஜந்து காணப்பட்டதாம். அதனைப் பார்த்த ஒருவர் ஒரு வாரம் வரை மூர்ச்சையாகிக் கிடந்தார். அவர் பார்த்தபோது பல்லி ஓர் நீர் யானையைத் தின்று கொண்டிருந்ததாம். அதன் எடை நான்கு டன் இருக்குமாம்.


## அமிர்தசாகரம்

தேகபலத்தையும், இரத்த விருத்தியையும், ஞாபக சக்தியையும், தாது புஷ்டியையும் கொடுப்பதில் எங்களுடைய

**ஆதங்க நிக்ரஹ மாத்ரைகள்**

**அமிர்தசாகரம் போன்றவை.**

| | | | |
|---|---|---|---|
| 32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு | ரூ. 1 | 0 | 0 |
| 5 டப்பிகள் | ரூ. 4 | 0 | 0 |

இனும்! இன்பவாழ்க்கையாலடைந்த சக்தி இனும்!

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26, பிராட்வே, மதராஸ்.



## NATIONAL INSURANCE COMPANY, LIMITED.

**Head Office :**
**NATIONAL INSURANCE BUILDING,**
**7, Council House Street, Calcutta.**

| | | |
|---|---|---|
| New Business Completed During 1932 ... | ... | Rs. 1,55,66,720 |
| Out of a business of | ... | Rs. 1,96,70,000 received in proposals. |

189153

Life Assurance is security { for the policyholder from an investment point of view. / for the policyholder and after him for his wife and children.

| | | |
|---|---|---|
| Claims paid over | ... | Rs. 1,00,00,000 |
| Total Assets exceed | ... | Rs. 1,90,00,000 |

For Terms & Conditions apply to:—

T. ANANTACHARI, Branch Secretary, 113, Armenian Street, Madras. OR R. G. DAS & Co., *Managers.*

**FIRE & ACCIDENT RISKS**
**covered by**
**NATIONAL FIRE**
AND
**GENERAL INSURANCE COMPANY Ltd.,**
**NATIONAL INSURANCE BUILDING,**
**7, Council House Street, Calcutta**

For Terms & Conditions apply to:—

T. ANANTACHARI, Branch Secretary, 113, Armenian Street, Madras. OR R. G. DAS & Co., *Managers.*



எஷ்யாடிக் கவர்ன்மேண்டு செக்யூரட்டி

## லைப் அஷ்யூரன்ஸ் கம்பெனி, லிமிடெட்,

(மைசூரில் இணைக்கப்பட்டது.)

பிரதான இந்திய சமஸ்தானத்தைச் சேர்ந்த இம் முற்போக்கு வாய்ந்த லைப் ஆபீஸ் இணையற்ற மிகவும் குறைந்த செலவில் நவீன அஷ்யூரன்ஸ் திட்டங்கள் யாவற்றையும் அளிக்கின்றது. நோய், விபத்து காலங்களில் சக்தியில்லாமலிருந்தால் அப்போது லாபங்களுடனும், தானாகவே பறிமுதல் செய்யப்பட முடியாத வசதியுடனும் கூடியது. பாலிஸிகள் பறிமுதல் செய்யப்படாமலும், ஆக்ஷேபிக்க முடியாமலும் உள்ளவை. பாலிஸி கெடுவடையும் காலத்தில் சாசுவதமான ஆதரவு கொடுப்பது. ஸ்திரீகளது ஆயுள்களுக்கும் இன்ஷியூர் செய்யப்படும்.

இன்றே விவரங்களுக்கு எழுதுக :—

V. ரங்கஸாமி பி. ஏ., பி. எல்.,
ஜெனரல் செக்ரிடரி & மானேஜர்.
பெங்களூர் ஸிடி.


Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor)